நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

Registered as a News Paper    பக்கங்கள்: 04    விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM    Peoples Daily    மக்கள் தினசரி

நாதம் 03    திருவள்ளுவர் ஆண்டு 2023    ஆவணி 22    (07 - 09 - 1992)    திங்கட்கிழமை    ஓசை 202

## 3000 இடம் பெயர்ந்த மாணவர்கள் கல்வியை தொடரமுடியாத நிலை

கடந்த மாத இறுதியில் இடம்பெற்ற சிறிலங்கா இராணுவ ஆக்கிரமிப்பால் வெளியேறி முகாம்களிலும் உறவினர் வீடுகளிலும் தங்கியுள்ள 3000ற்கும் மேற்பட்ட மாணவர்கள் தமது கல்வியைத் தொடர முடியாத நிலையில் உள்ளனர். சிறிலங்கா இராணுவம் அளவெட்டி, இளவாலை, மாதகல் பகுதிகளை திடீரெனச் சுற்றி வளைத்ததால் அப்பகுதி மக்கள் தமது உடைமைகளைக் கைவிட்டு உயிரைப் பாதுகாக்கும் நோக்குடன் அவசர அவசரமாக வெளியேறியது தெரிந்ததே இவர்கள் தாம் அணிந்திருந்த உடைகளுடனேயே வெளியேறினர். இதனால் இப் பகுதி மாணவர்களின் பாடசாலை உபகரணங்கள் சீருடைகள்என்பன இராணுவத்தின் பிடிக்குள் சிக்கிக் கொண்டன. தற்போது இவர்கள் கல்வி கற்பதற்கு வசதியாக பாதுகாப்பான இடங்களில் அமைந்துள்ள பாடசாலைகளில்

(4ஆம் பக்கம் பார்க்க)

# மக்களின் மாபெரும் எதிர்ப்பியக்கம்; யாழ். நகரில் புதனன்று பேரணி

## நிவாரண வெட்டை எதிர்த்து வவுனியாவில் ஆர்ப்பாட்டம்

(வவுனியா)

வவுனியா, தாண்டிக்குளம் அகதி முகாமைச் சேர்ந்த நூற்றுக்கு மேற்பட்ட அகதிகள் தங்களுக்கு முழு அளவிலான நிவாரணம் வழங்கப்பட வேண்டுமென்று கோரி கடந்த வெள்ளிக்கிழமை வவுனியா கச்சேரியை நோக்கி படையெடுத்தனர் எனத் தெரிவிக்படுகிறது.

இவர்கள் அனைவரையும் கச்சேரி பிரதான வாசலில் தடுத்து நிறுத்திய பொலிசார் இவர்களின் பிரதிநிதிகளாக ஒரு சிலரையே உள்ளே செல்ல அனுமதியளித்தனர் நாற்பது அகதிகள் உள்ளே சென்று அரசாங்க அதிபர் எஸ். தில்லை நடராஜாவைச் சந்தித்தனர்.

தமிழகத்திலிருந்து மீண்டும் தாயகம் திரும்பியுள்ள தாங்கள் சொந்த இடங்களுக்குப்

[4ஆம் பக்கம் பார்க்க]

## நிவாரணவெட்டை எதிர்த்து பொது நிறுவனங்கள் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

இராணுவ ஆக்கிரமிப்பு காரணமாக இடம்பெயர்ந்துள்ள மக்களிற்கான நிவாரணத்தை சிறிலங்கா அரசு அரைவாசியாக குறைத்ததை ஆட்சேபித்து எதிர்ப்பியக்கம் ஒன்றை நடாத்த முப்பத்தைந்துக்கு மேற்பட்ட பொது நிறுவனங்கள் திட்டமிட்டு வருகின்றன. எதிர் வரும் புதன்கிழமையன்று யாழ். நகரில் பேரணியொன்றை இவை நடாத்த உள்ளதாக தெரியவருகிறது.

இதற்கான அமைப்புவேலைகள் பற்றி ஆராய்வதற்கான கூட்டமொன்று இன்று காலை 10.00 மணிககு அர்ச்சுனா வீதியிலுள்ள ''பொன்ட்'' கல்வி நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

இக் கூட்டத்தில் வெகுஜன அமைப்புகளின் தலைவர்கள், செயலாளர்கள் பிரதிநிதிகளை கலந்துகொள்ளும்படி தமிழீழ வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

அழைக்கப்படும் அமைப்புக்களின் விபரம் வருமாறு.

அரசாங்க, தனியார் தொழிற் சங்கம், ஆசிரியர் தொழிற் சங்கம், மாணவர் ஒன்றியம், பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் வர்த்தகர் சங்கம், பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள், பொது முகாமையாளர்கள், கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கம் (கிளைகளும், சமாசமும்), தெங்கு பனம் பொருள் உற்பத்தி கூட்டுறவுச் சமாசம், ஊழியர்கள் சங்கம், யாழ். மாவட்ட ஐக்கிய நாணய சங்கம், கடற்றொழிலாளர் சங்கம் சம்மேளனம், சனசமூக நிலையங்களின் சமாசம், விளையாட்டுக் கழகங்களின் சமாசம், வங்கி ஊழியர் சங்கம், சமாசம், அரசாங்க எழுதுவினைஞர் சங்கம், உள்ளூராட்சி ஊழியர் சங்கம், இலங்கை போ.வ. ஊழியர் சங்கம், தனியார் மினிபஸ் சங்கம், முச்சக்கர வண்டி சங்கம், சுருட்டுத்

(4ஆம் பக்கம் பார்க்க)

## தொண்டர் ஆசிரியர் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வித் திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட பட்டியலில் தவறவிடப்பட்ட தொண்டர் ஆசிரியர்களின் நிலை குறித்து ஆராயவும், தொண்டர் ஆசிரியர்களை நிரந்தரமாக்குவதற்கும் எடுகக வேண்டிய நடவடிக்கைகள் பற்றி ஆராய்வதறகுமான கூட்டமொனறு இன்று காலை 9.30 மணிககு யாழ். வெளிவாரிப் பட்டப்படிபபுக் கல்லூரியில் நடைபெறவுள்ளது என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் செய்திக் குறிப்பொன்று தெரிவிககின்றது.

இக் கூட்டத்தில் சகல தொண்டர் ஆசிரியர்களையும் கலந்து கொள்ளுமாறும் சங்கம் கோரியுள்ளது. கூட்டத்தில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் த. மகாசிவம் உரையாற்றவுள்ளார்.

## அரச சார்பற்ற நிறுவனங்களினால் அரச அநிபர் கோரிக்கை நிராகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் அரசாங்க அதிபர் விடுத்த வேண்டுகோளை அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் நிராகரித்ததாகத் தெரியவருகிறது.

சிறிலங்கா அரசின் நிவாரண வெட்டை அடுத்து இராணுவ நடவடிக்கைகளால் இடப்பெயர்ந்துள்ள மக்களுக்குத் தேவையான உலர் உணவு விநியோகத்தை மேற்கொள்ளுமாறு யாழ் அரசாங்க அதிபர் யாழ் மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்திற்கு விடுத்த வேண்டுகோளையேஅதுநிராகரித்துள்ளது இதுதொடர்பாக இணையம் கருத்து தெரிவிக்கையில் அண்மைக்கால இராணுவ ஆக்கிரமிபபால் இலட்சக கணககான மக்கள் அகதிகளாகியுள்ளனர். இவர்களுக்கான உலர் உணவை விநியோகிக்கக் கூடியளவிற்கு தற்சமயம் தம்மிடம் கையிருப்பு இல்லை. எனவே இவ்வளவு தொகையான மக்களுக்கு அரசாங்கத்தைப்போன்று தொடர்ந்து வழங்கமுடியாது எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ச), (பா)

## அதிகாரிகள் இழப்பினால் படை நடவடிக்கை மந்தம்

### பி.பி.ஸி தெரிவிப்பு

(லண்டன்)

வடபகுதி இராணுவ நடவடிக்கையில் ஒரு மந்த நிலை ஏற்பட்டுள்ளதாக பி.பி.ஸி நேற்று தெரிவித்தது. இராணுவ உயரதிகாரிகள் எட்டுப் பேரின் மரணம் ஆள் பற்றாக்குறை என்பனவே இம் மந்த நிலைக்கு காரணம் என தெரிவிக்கப்படுகிறது

இராணுவ சிரேஷ்ட தலைமை அதிகாரியாக பதவி வகித்து வந்த மேஜர் ஜெனரல் பாலரட்ணராஜா செப்டெம்பர் முதலாம் திகதி முதல் பதவியிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார் இவரது பதவியை வடபகுதிக்கான இராணுவத் தளபதி ஜெரிசில்வா ஏற்றுக்கொள்ள

வெற்றிடத்தை நிரப்ப இவர்களைப் போன்று தேர்ச்சி பெற்ற அதிகாரிகள் இராணுவத்தில் இல்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இராணுவ சிரேஷ்ட உயரதிகாரியாக நியமனம் பெறவுள்ள மேஜர் ஜெனரல் ஜெரி சில்வாவிறகு இராணுவ நடவடிக்கையில் மட்டுமே அனுபவம் உண்டு என்றும் இராணுவ நிர்வாகத் துறையில் அனுபவம் இல்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. இதனால் இவரது நியமனம்

## 233 அகதி முகாம்களில் ஒன்றரை லட்சம் மக்கள்

யாழ். மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தால் கடந்த காலங்களில் மேற்

களில் முப்பதாயிரம் குடும்பங்களைச் சேர்ந்த ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் பேர் ஆலயங்களிலும், பாடசாலைகளிலும்

சேர்ந்த 85,000 பேர் தங்கியுள்ளனர். இவர்களுக்கான போசாக்கு உணவுகளையும்

## வவுனியாவில்இருந்து வெளியேறும் சிங்களவர் விவகாரம் ஆராய மாநாடு

(கொழும்பு)

வவுனியாவிலிருந்து வெளியேறிவரும் சிங்கள மக்களின் விவகாரம் குறித்து ஆராய சிறிலங்கா ஜனாதிபதியின் சர்வதேச விவகார ஆலோசகர் பிரெட்மன் வீரக்கோன், வவு

கொள்ளும் மாநாடு ஒன்று இன்று கொழும்பில் நடைபெறவுள்ளது.

புலிகளின் தாக்குதலையடுத்து மடுகந்த, வண்ணான் குளப்பகுதி இராணுவ முகாம்கள் திடீரென அகற்றப்பட்ட

இக் கூட்டத்தில் வெகுஜன அமைப்புகளின் தலைவர்கள், செயலாளர்கள் பிரதிநிதிகளை கலந்துகொள்ளும்படி தமிழீழ வெகுஜன அமைப்புகளின் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

சங்கம், பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள், பொது முகாமையாளர்கள், கூட்டுறவு ஊழியர் தொழிற் சங்கம் (கிளைகளும், சமாசமும்), தெங்கு பனம் பொருள் உற்பத்தி கூட்டுறவுச் சமாசம், சமாசம், அரசாங்க எழுதுவினைஞர் சங்கம், உள்ளூராட்சி ஊழியர் சங்கம், இலங்கை போ.வ. ஊழியர் சங்கம், தனியார் மினிபஸ் சங்கம், முச்சக்கர வண்டி சங்கம், சுருட்டுத்

(4ஆம் பக்கம் பார்க்க)

# 233 அகதி முகாம்களில் ஒன்றரை லட்சம் மக்கள்

யாழ். மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தால் கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளால் இதுவரை 80,000 குடும்பங்களைச் சேர்ந்த நான்கு இலட்சம் மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி அகதிகளாகியுள்ளதாக செயலக புள்ளிவிபரங்களில் இருந்து தெரிய வருகிறது.

இவ்வாறு வெளியேறிய மக்களில் முப்பதாயிரம் குடும்பங்களைச் சேர்ந்த ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் பேர் ஆலயங்களிலும், பாடசாலைகளிலும் தங்கியுள்ளனர். யாழ் மாவட்டத்தில் 233 முகாம்களில் இவர்கள் தங்கியுள்ளனர்.

இவற்றில் 210 முகாம்கள் அரச சார்பற்ற நிறுவனங்களின் நேரடிக் கண்காணிப்பில் இயங்குகின்றன. இவற்றில் 17,000 குடும்பங்களைச் சேர்ந்த 85,000 பேர் தங்கியுள்ளனர். இவர்களுக்கான போசாக்கு உணவுகளையும் மலசலகூட வசதிகளையும் இவ் அமைப்பு மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை வெளியேறிய பேரின் 50.000 குடும்பங்களைச்சேர்ந்த 2,50.000 மக்கள் தமது உறவினர் வீடுகளில் தங்கியுள்ளனர். (ச. பா)

# இடம் பெயர்ந்த மக்களை பரவலாக தங்கவைக்க முயற்சி

(நமது நிருபர்)

கடந்தகால சிறிலங்கா இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளால் வெளியேறி முகாம்களில் செறிந்து வாழும் மக்களை பரந்து வாழ வைக்கும் முயற்சியில் அரச சார்பற்ற நிறுவனங்கள் ஈடுபட்டுவருகின்றன.

இவ்வாறு மக்கள் செறிந்து வாழ்வதால் முகாம்களில் பல சுகாதார சீர்கேடுகள் காணப்படுகின்றன. இவற்றைத் தவிர்ப்பதற்காகவும் பாடசாலைகளில் பெருந்தொகையான மக்கள் தங்கியிருப்பதால் அங்கிருந்து அவர்களை வேறு இடங்களுக்கு மாற்றும் நோக்குடனுமே சாவகச்சேரி, சண்டிலிப்பாய், மானிப்பாய், சங்கானைப் பகுதிகளில் பெருமளவு குடிசைகள் அமைக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது. இக்குடிசைகளை அமைக்கும் பணியில் அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் சண்டிலிப்பாய் பகுதியில் முந்நூறு குடிசைகளை உருவாக்குவதற்கு திட்டமிட்டுள்ளது. தற்போது அங்கு 150குடிசைகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

போரூட் நிறுவனம் சங்கானைப் பகுதியில் 300 குடும்பங்களுக்கான குடிசைகளை அமைத்து வருகின்றது. தென்னிந்தியத் திருச்சபை மானிப்பாயில் 50 குடிசைகளை அமைத்து வருகின்றது. தமிழர் புனர் வாழ்வுக் கழகம் சாவகச்சேரியில் 500குடிசைகளையும், உடுவிலில் 100 குடிசைகளையும், சங்கானையில் 100 குடிசைகளையும் அமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. கியூடெக் நிறுவனம் மானிப்பாய் பகுதியில் 20 குடிசைகளையும்,

(4ஆம் பக்கம் பார்க்க)

# தொடர்ந்தும் நிவாரணம் வழங்குமாறு அரச சார்பற்றநிறுவன. கோரிக்கை

(நமது நிருபர்)

இதுவரை காலமும் நடைமுறையில் இருந்ததைப் போன்று தொடர்ந்தும் இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு வாராந்தம் உலர் உணவைத் தொடர்ந்து வழங்குமாறு யாழ் மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் அரசைக் கேட்டுள்ளது.

மேற்படி இணையம் அரசின் நிவாரண வெட்டினால் ஏற்படவுள்ள பாதிப்புகளை விளக்கியும் நிவாரணத்தை தொடர்ந்து வழமைபோல்வழங்குமாறு வற்புறுத்தியும் மகஜர்களை அனுப்புவதென ஏகமனதாக நேற்றுக்காலை தீர்மானித்தது.

இதன்படி சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளால் இதுவரை 80000 குடும்பங்களைச் சேர்ந்த நான்கு இலட்சம் மக்கள் யாழ். மாவட்டத்தில் அகதிகளாகியுள்ளனர். போதிய மருத்துவ வசதிகள், தங்குமிட வசதிகள் போசாக்கின்மைகளால் இவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதுவரை அரசினால் வழங்கப்பட்டு வந்த உலர் உணவு இவர்களது உயிரைப் பாதுகாக்க மட்டுமே போதுமானதாக இருந்தது இந்நிலையில் வழங்கப்பட்டுவந்த நிவாரண விநியோகத்தை அரைவாசியால் குறைத்தது மக்களைப் பட்டினிச் சாவிற்கு இட்டுச் செல்லும் ஓர் வழியாகவே கருத முடிகிறது எனவே இடம் பெயர்ந்தோருக்கான உலர் உணவு நிவாரணத்தை வாரத்திற்கொரு தடவை தொடர்ந்து வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் இது குறித்து அரசு

(4ஆம பக்கம் பார்க்க)

தில் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் த. மகாசிவம் உரையாற்றவுள்ளார்.

வவுனியாவில் இருந்து

# வெளியேறும் சிங்களவர் விவகாரம் ஆராய மாநாடு

(கொழும்பு)

வவுனியாவிலிருந்து வெளியேறிவரும் சிங்கள மக்களின் விவகாரம் குறித்து ஆராய சிறிலங்கா ஜனாதிபதியின் சர்வதேச விவகார ஆலோசகர் பிரெட்மன் வீரக்கோன், வவுனியா மாவட்ட ஐ தே. க எம். பி. ராஜமனோகரி புலேந்திரன், புனர்வாழ்வு அமைச்சர் தயாரத்தின ஆகியோர் கலந்து கொள்ளும் மாநாடு ஒன்று இன்று கொழும்பில் நடைபெறவுள்ளது.

புலிகளின் தாக்குதலையடுத்து மடுகந்த, வண்ணான் குளப்பகுதி இராணுவ முகாம்கள் திடீரென அகற்றப்பட்டதால் அப்பகுதி மக்கள் பீதியடைந்து வெளியேறத்தொடங்கியதாகச் செய்திகள் வெளி வந்தமை தெரிந்ததே.

## பி.பி.ஸி தெரிவிப்பு

(லண்டன்)

வடபகுதி இராணுவ நடவடிக்கையில் ஒரு மந்த நிலை ஏற்பட்டுள்ளதாக பி.பி.ஸி நேற்று தெரிவித்தது. இராணுவ உயரதிகாரிகள் எட்டுப் பேரின் மரணம் ஆள் பற்றாக்குறை என்பனவே இம் மந்த நிலைக்கு காரணம் என தெரிவிக்கப்படுகிறது

இராணுவ சிரேஷ்ட தலைமை அதிகாரியாக பதவி வகித்து வந்த மேஜர் ஜெனரல் பாலரட்ணராஜா செப்டெம்பர் முதலாம் திகதி முதல் பதவியிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார் இவரது பதவியை வடபகுதிக்கான இராணுவத் தளபதி ஜெரிசில்வா ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலையில் உள்ளார்.

இதனால் வடபகுதிக்கான இராணுவத் தளபதி பதவி வெற்றிடம் ஆகியுள்ளது.இவ் வெற்றிடத்தை நிரப்ப இவர்களைப் போன்று தேர்ச்சி பெற்ற அதிகாரிகள் இராணுவத்தில் இல்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இராணுவ சிரேஷ்ட உயரதிகாரியாக நியமனம் பெறவுள்ள மேஜர் ஜெனரல் ஜெரி சில்வாவிற்கு இராணுவ நடவடிக்கையில் மட்டுமே அனுபவம் உண்டு என்றும் இராணுவ நிர்வாகத் துறையில் அனுபவம் இல்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. இதனால் இவரது நியமனம் குறித்தும் அதிருப்தி நிலவுகிறது.

அத்துடன் வடபகுதியில்

(4ஆம் பக்கம் பார்க்க)

## நீதிபதி வீட்டிற்கு கல் வீச்சு

ஜனாதிபதி தேர்தல் ஆட்சேப வழக்கில் விசாரணை நடத்திய நீதிபதியொருவர் வீட்டுக்கு கலவீச்சு நடாத்தப்பட்டுள்ளது.

இந் நீதிபதி தனது தீர்ப்பில் செலவுத்தொகை வழங்கப்படத் தேவையில்லை என கூறியிருந்தார்

இக் கல் வீச்சினால் அவரது வீட்டு ஜன்னல்கள் உடைந்து நொருங்கியதாகவும் காருக்கும் சேதம் ஏற்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பாக எவரும் கைது செய்யப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

# மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ந்து படைக் குவிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏறாவூர்மண்டூர், வாழைச் சேனைப் பகுதிகளில் தொடர்ந்து சிறிலங்கா படையினர் குவிக்கப்பட்டு வருகின்றனர்.

இம்மாவட்டத்தின் பாதுகாப்பை புலப்படுத்தவே இந் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக சிறிலங்கா இராணுவ தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. ஆனால் அங்கு குவிக்கப்பட்டுள்ள படையினர் அங்கு வாழும் தமிழர்களைத் தாக்கியதாக தெரியவருகிறது அங்குள்ள தமிழர்களின் வீடுகளும், அகதி முகாம்களும் இராணுவத்தினரால் சோதனையிடப்பட்டு வருகின்றன. அங்கு மக்களிடம் மேலதிகமாகவுள்ள உணவுப் பொருள்களை இராணுவததினர் பறித்துச் செல்கின்றனர் பத்து வயதுச் சிறுவன் முதல் பல ஆண்கள் விசாரணைக்காக முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர். இதேவேளை தேடுதல் வேட்டையின்போது பல பெண்கள் இராணுவத்தால் இம்சிக்கப்பட்டுள்ளனர். வாழைச்சேனையில் முஸ்லிம்களின் அச்சுறுத்தல்களால் முகாம்களில் வாழ்ந்த தமிழர்கள் பலர் வாகரைக்கு இடம் பெயர்ந்துள்ளனர். வாகரையிலும் இராணுவத்தினரை குவிக்கும் நடவடிக்கையில் அதிகாரிகள் ஈடுபட்டுவருகின்றனர்.

## மூவருக்கு மரணதண்டனை

(மாத்தறை)

1988 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பததேகமவில் இடம் பெற்ற கொலை தொடர்பாக மூன்று சகோதரர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

யூரிகள் யாவரினதும் ஏகோபித்த முடிவின் அடிப்படையில் இத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

பொருள்களை ஏற்றி வந்த

# படகுமீது கடற்படை சூடு ஒருவரைக் காணவில்லை

(குருநகர்)

புலோப்பளைக் கடலில் சிறிலங்கா கடற்படை ரோந்துப் படகில் வந்தவர்கள் திடீரெனச் சுட்டதை அடுத்துக் கடலில் குதித்தவரைக் காணவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது

இச்சம்பவம் கடந்த சனி இரவு நடைபெற்றது பொருள்களை ஏற்றிப் பறிக்கும் வள்ளத்தில் மூவர் பொருள்களுடன் வந்து கொண்டிருக்கையில் கடற்படையினர் வள்ளத்தை நோக்கிச் சுட்டதாகவும்,

(4ஆம் பக்கம் பார்க்க)

காணாமற்போனோர் பற்றிய விசாரணை

# 406 முறையீடுகள் 47 பேரே கண்டுபிடிப்பு

காணாமற் போனோர் பற்றிய விசாரணை செய்வதற்கென ஆணைக்குழு நியமிக்கப்பட்ட பின்னர் 406 முறைப்பாடுகள் கிடைத்திருப்பதாகவும் இதில் 47 பேர் மட்டுமே தேடிக் கண்டுபிடிக்கப்பட்டு பெற்றோரிடம் ஒப்படைக்கப்

(4ஆம் பக்கம் பார்க்க)

# ஆஸ்பத்திரிஉபகரணங்களில் 30வீதமானவை பழையவை

இலங்கை முழுவதிலுமுள்ள ஆஸ்பத்திரிகளில் உபயோகிக்கப்படும் 3000 அத்தியாவசிய வைத்திய உபகரணங்களில் சுமார் 1000க்கு மேற்பட்டவை மிகவும் பழையவை எனச் சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த உபகரணங்கள் 150

(4ஆம் பக்கம் பார்க்க)

சூழலைப் பேணி வழங்களைப் பாவி

## வரி விளம்பரம்


### கடிகாரமா? றேடியோவா?

உங்கள் கடிகாரங்கள் றேடியோக்கள் பழுதடைந்து விட்டனவா? முழு உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள இன்றே எம்மை நாடுங்கள் சகல கடிகார பற்றறிகளும் எம்மிடம் உண்டு டில்கா வாச் வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, (பழைய விகாரை முன்பாக) யாழ்ப்பாணம். (சி/4964)

### காணவில்லை

பிறவுண், கறுப்பு கலந்ததும் நெற்றியில் கறுப்பு பொட்டு அமைந்ததுமான, 2வயது நிரம்பிய ஆண் பொமனேரியன் நாய்க்குட்டி, காரைக்காடு, கோண்டாவில் மேற்கில் காணாமல் போய்விட்டது. கண்டவர்கள் மகாலிங்கம், அரைக்கும் ஆலை புகையிரத வீதி, கோண்டாவில் முகவரிக்கு அறியத்தரவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (3142)

### ஒரேயொரு நூல்

அராலியூர் சுந்தரம்பிள்ளை எழுதிய முதலாம்பிள்ளை 30/- இன்று விற்பனையாகும் ஒரேயொருவானொலிநாடகநூல், இலக்கியப் பரிசு பெற்றது 20 வீத கழிவு உண்டு. 30, கடையிற்சுவாமி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். (3068)

### எழுதுனர் பரீட்சை

எழுதுனர் போட்டிப் பரீட்சைத் தகுதித்தேர்வுக்கான பொது விவேகப்பயிற்சி வெளிவந்துள்ளது. க. குணராசா எம். ஏ. எல்லா பிரபல புத்தகசாலைகளிலும் கிடைக்கும். (3143)


## இலவச வைத்திய சேவை

(கொழும்புத்துறை)

நல்லூர் லயன்ஸ் கழகம் வசதிகுறைந்தோருக்கான இலவச வைத்திய சேவையைத் தற்போது நடாத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

இச்சேவையின் ஒரு பகுதியாக அண்மையில் நல்லூர் செம்மணி வீதியில் உள்ள மெடி எயிட்ஸ் மருத்துவமனையில் வைத்திய சிகிச்சையும், வைத்திய ஆலோசனையும் வழங்கப்பட்டது என லயன்ஸ் கழகத் தலைவர் தெரிவித்துள்ளார். (24)

## நன்றி தெரிவிப்பு

(நமது நிருபர்)

அண்மைக் காலத்தில் சிறிலங்கா இராணுவம் வலிகாமம் பகுதியில் மேற்கொண்ட ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளால்

# நல்லூர் கண்காட்சி விற்பனையில் கம்புத் தானியம் அறிமுகம்

(நமது நிருபர்)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தினால் வெளிநாட்டிலிருந்து தமிழீழத்திற்கு அறிமுகப்படுத்தப்பட்ட, வரட்சியைத் தாக்கக் கூடியதான கம்புப் பயிரிலிருந்து தயாரிக்கப்பட்ட உணவுப் பதார்த்தம் நல்லூர் உற்சவ கால கண்காட்சி விற்பனையின் போது பெருந்திரளான மக்களுக்கு விநியோகிக்கப்பட்டது. கம்புப் பயிரினை மக்களுக்கு அறிமுகப்படுத்தும் நோக்குடன் இவ்வருட மேதின ஊர்வலத்தின் போதும் கம்பிலிருந்து தயாரிக்கப்பட்ட உணவுப் பதார்த்தம் விநியோகிக்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

கோதுமைக்கு மாற்றீடாகப் பயன்படுத்தக் கூடிய இக்கம்புத் தானியம் போசாக்கு மிகுந்தது இதில் 11.59 வீதம் புரதமும், 4 99 வீதம் கொழுப்பும் 2.65வீதம் கனிப்பொருளும் இருக்கின்றது. வளங் குறைந்த மண்ணில், குறைந்த நீர்ப்பாசன வசதியுடன் செய்கை பண்ணக் கூடிய வரட்சியைத் தாங்க வல்லதான இக்கம்புப் பயிர் எண்பது நாட்களில் அறுவடை செய்யக் கூடிய குறுகிய காலப் பயிராகும். இக்கம்புத் தானியத்திலிருந்து பெறப்படும் மாவினைக் கொண்டு கோதுமையிலிருந்து தயாரிக்கக் கூடிய உணவு வகைகளையும் பிட்டு லட்டு, பிஸ்கட் போன்றசுவையான சிற்றுண்டி வகைகளையும் இத்துடன் கஞ்சி போன்றவற்றையும் தயாரிக்க முடியும். மேலும் கம்புப் பயிர் அறுவடையின் பின்னர்எஞ்சும் தண்டுக் கழிவுகள் கால்நடைகளுக்கு சிறந்த தீவனமாகும்

உணவு ஐந்தொகையின் படி. வடதமிழீழத்தில் ஒரு வருடத்தில் 43,500 மெற்றிக் தொன் கோதுமைமா நுகரப்படுகின்றது. இதற்காக தமிழீழத்திலிருந்து வருடாந்தம் குறைந்தது 576.3 மில்லியன் ரூபா வெளிச் செல்கின்றது. உள்ளூரில் பயிர் செய்யக்கூடிய சிறுதானியங்களை எமது உணவுப் பழக்கத்தில் சேர்ப்பதன் மூலம் வெளியே செல்லும் பணத்தினை இங்கேயே தங்க வைக்கலாம் என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

## பரு. கணக்காளர் பிரிவு தனிப்பிரிவாக இயங்கும்

(வடமராட்சி)

பருத்தித்துறை பிரதேச செயலகத்தின் கணக்காளர் பிரிவு, செயலகத்தின் முன் உள்ள கட்டிடத்தில் இம் மாதம் முதல் தனிப்பிரிவாக இயங்க ஆரம்பித்துள்ளது.

இச்செயலகத்திற்குமாகாண சபையால் கணக்காளர் ஒருவரும் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளார். இவ்வலுவலகத்தில் கணக்காளர் உட்பட ஐந்து உத்தியோகத்தர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

இவ்வலுவலகத்தின் மூலம் உத்தியோகத்தர்களது சம்பளம், கொடுப்பனவுகள் வழங்கப்படுவதோடு, எதிர்வரும் காலத்தில் ஓய்வூதியர்களது ஓய்வூதியமும்வழங்கப்படும்(28

## கூட்டம்

யாழ் மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் விசேட ஆட்சிக் குழு கூட்டம் நாளை 8-ம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப 4 30மணிக்கு நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் பேரவைத் தலைவர் திரு. வே கெ. தனபாலன் தலைமையில் நடைபெறும்.

பல முக்கியமான விடயங்கள் இக்கூட்டத்தில் ஆராயப்பட உள்ளதால் சகல இந்து இளைஞர் மன்றங்களின் பதவியாளர்களையும் தவறாது சமுகம் தரும்படி பேரவையின் பொதுச் செயலாளர் திரு சி. சி வரதராசா வேண்டுகோள் விடுத்துள்ளார் (24)

# கிராம அபிவிருத்தி சங்கம் புனரமைக்க பணிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்கு பகுதியிலுள்ள சகல கிராம அபிவிருத்திச் சங்கங்களையும் புனரமைப்புச் செய்யுமாறு வடக்கு கிழக்கு மாகாண சபையின் கிராம அபிவிருத்தி திணைக்களம் அறிவித்துள்ளது.

இது சம்பந்தமாக சகல மாவட்டச் செயலகங்களுக்கும் அனுப்பி வைத்துள்ள சுற்றுநிருபத்தில் பின்வருமாறுகுறிப்பிடப்பட்டுள்ளது.

கிராம அபிவிருத்திச் சங்கங்களுக்கு இதுவரைஇருந்துவந்த அதிகாரங்களைவிடதற்போது கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் நீண்டகாலமாக நடைமுறையில் இருந்து வந்த யாப்பு விதிகள் மாற்றி அமைக்கப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளதுடன் புதிய யாப்பின் பிரதிகளும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (42)

## குளங்கள் புனரமைப்பு

(கொழும்புத்துறை)

வடமராட்சிப் பகுதிகளில் ''போரூட் நிறுவனம்'' பத்துக் குளங்களை புனரமைப்புச் செய்து வருகிறது.

இதில் மொத்தம் எட்டு குளங்களின் புனரமைப்பு வேலைகள் முடிவடைந்துள்ளன எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது. (24)

## அப்பியாசப் புத்தகம் அன்பளிப்பு

பண்டத்தரிப்புக் கோட்டத்திலிருந்து இடம்பெயர்ந்த பாடசாலைப் பிள்ளைகளுக்காக 1000 ரூபா பெறுமதியான 160 அப்பியாசப் புத்தகங்களை யாழ். மத்திய கல்லூரி அரிமா கழகத்தினர் கோட்டக்கல்வி பிரதிப்பணிப்பாளர் திரு. வி. மகேசவேலு அவர்களிடம் ஒப்படைத்தனர்.

## கடன் அடிப்படையில் விதை உருளைகிழங்கு

(கொழும்புத்துறை)

யாழ் மாவட்ட விவசாயிகளுக்குத் தேவையான விதை உருளைக்கிழங்கு கடன் அடிப்படையில் வழங்கப்படவிருக்கிறது.

விதை உருளைக்கிழங்கின் தேவையை அரச அதிபர் கமநல சேவை நிலையத்திடம் கோரியுள்ளார் (24)

# அகதிகள் நிவாரணக் குறைப்பு பட்டினிச் சாவுக்கு தள்ளும்

## - நவசமசமாஜக் கட்சி கண்டனம்

(கொழும்பு)

அகதிகளுக்கான நிவாரணத்தை அரைவாசியாகக் குறைக்கும் அரசின் நடவடிக்கை ஏற்கனவே துயரத்திலுள்ள அகதிகளை பட்டினிச் சாவுக்கு தள்ளும் ஒரு நடவடிக்கையாகும் என்று நவசமசமாஜக் கட்சி கண்டனம் தெரிவித்துள்ளது.

அகதிகளுக்கான நிவாரணத்தை குறைத்தது குறித்து கண்டனம் தெரிவித்து இக்கட்சியின் சார்பில் அக்கட்சியின் பிரதிநிதி வி. திருநாவுக்கரசு சிறிலங்கா ஜனாதிபதி ஆர் பிரேமதாசாவிற்கு தந்தி ஒன்றை அனுப்பி வைத்துள்ளார். அந்தத் தந்தியிலேயே இது பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது

வடக்கு கிழக்கு பிரச்சினைகளால் தங்கியுள்ள அகதிக் குடும்பங்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் 315 ரூபாய் நிவாரண உதவி போதாது என்று நாம் வலியுறுத்தி வரும் இவ்வேளையில் இந்த உதவித் தொகை அரைவாசியாகக் குறைக்கப்பட்டுள்ளமை வேதனைக்குரியது

இந்த மாதம் முதலாம் திகதியிலிருந்து அமுலுக்கு வந்துள்ள இந்த நிவாரணக் குறைப்பு நடவடிக்கையை கைவிட்டு முந்திய தொகையிலும் கூடுதலான தொகையை வழங்குமாறு கேட்டுக் கொள்கிறோம் எனவும் தந்தியில் கேட்கப்பட்டிருக்கிறது.

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு

# தோட்ட இளைஞரிடமிருந்து பெருந்தொகைபணம்மோசடி

(கொழும்பு)

வெளிநாட்டு வேலை வாய்ப்பு பெற்றுத் தருவதாக ஆசை காட்டி தோட்டப்புற இளைஞர், யுவதிகளிடமிருந்து பெரும்தொகைப் பணம் மோசடி செய்யப்படுவதாக பொலிசாருக்கு கிடைத்த முறைப்பாடுகளிலிருந்து தெரிய வந்துள்ளது.

இத்தகைய மோசடி சம்பவங்களால் மலையகப் பகுதிகளில் வீணான சண்டை சச்சரவுகளும் தற்கொலைச் சம்பவங்களும் ஏற்படுகின்றன என்றும் தெரிய வருகிறது

வெளிநாட்டு தொழில் வாய்ப்பு பெறுவதில் மோகம் கொண்ட யுவதிகளும் குடும்பப் பெண்களும் தங்கள் தங்க ஆபரணங்களை அடகு வைத்தும், வட்டிக்குப் பணம் பெற்றும் முகவர் நிலையங்களுக்கு பணம் செலுத்தி இறுதியில் தொழிலும் இல்லாமல், பணத்தையும் மீளப்பெற முடியாமல் தவிக்கும்சம்பவங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறதாம்.

முகவர்நிலையங்களுக்கு எதிராக பொலிசில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டாலும் பல சமயங்களில் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படுவதில்லை எனவும், கூறப்படுகிறது

# இலட்சியப் போரை எதிர்த்து எந்த சக்தியும் நிலைபெற முடியாது

## - பாஸ்கரன் பேச்சு

(வடமராட்சி)

கொளுந்து விட்டு எரிகின்ற எமது இலட்சியப்போரை கபளீகரம் செய்ய முனையும் எந்த சக்தியும் இந்த மண்ணிலே நிலையாக வாழ முடியாது இந்த உண்மை எமது போராட்ட வரலாற்றின் மூலம் பல்வேறு சந்தர்ப்பங்களில் நிரூபித்துக் காட்டப் பட்டுள்ளது

இவ்வாறு கரணவாய் சோளங்கன் சனசமூக நிலையத்தில் நடைபெற்ற போர்க்காலகருத்தரங்கில் வடமராட்சி கலை பண்பாட்டுக்கழக பொறுப்பாளர் திரு. பாஸ்கரன் தெரிவித்தார்.

ஏற்படுகின்ற இன்னல்கள் இழப்புகளைக் கண்டுசோர்ந்து விடாமல் சோதனைகளைக் கண்டு விரக்தி கொள்ளாமல் எமது சுதந்திர விடிவுக்காக

ஒரு உன்னதமான நிலை தோற்றம் பெற்றுள்ளது இந் நிலைமை கண்டு சிறிலங்கா அரசு செய்வதறியாது திகைத்துக் கொண்டிருக்கிறது பீதி உறுகின்றது இந்த உலக அரங்குகளின் பார்வை தமிழீழ விடுதலைப்போராட்டத்திற்கு சாதகமாக அமைந்து விடுமோவென்றுஅஞ்சுகின்றது

இந்நிலைமையை தன் பக்கம் திசை திருப்பிவிட இந்த மண்ணிலே ஒரு மிகப்பெருத்த யுத்தத்தை தொடர்ந்து எமது மக்களை இந்தப் போராட்டத்திலிருந்துபிரித்து விட கங்கணம் கட்டி நிற்கிறது இந்த உண்மையை புரிந்து கொண்டு எமது உரிமைப் போராட்டத்தின் உயர்வுக்கு நாம் அனைவரும் ஒருங்கிணைந்து உழைக்க முன்வர வேண்டும்.

அதனைத்தொடர்ந்து கரவெட்டி வட்டவை பொறுப்பாளர் திரு. மணிவண்ணன் தனதுரையில் சிறிலங்கா அரசாங்கத்தின் திட்டமிட்டு நடத்தப்பட்டு வருகின்ற இந்த யுத்தத்தினை நாமும் வெற்றி கொள்ள வேண்டும். இந்த வெற்றிக்கு ஆண் பெண் வயோதிபர் முதியோர் என்ற வேறுபாடின்றி அனைவரும் ஒத்துழைப்பு வழங்குதல் அவசியம் (82)

# யாழ். நகரப் பகுதிகளில் குடிநீர் விநியோகம்

யாழ்.நகரின் மத்திய பகுதியில் பல்வேறு அலுவல்களின் நிமித்தம் நகர மத்திக்கு வரும் மக்கள் தாகசாந்தி செய்வதற்காக பாதுகாப்பான குடிநீர் கிடைக்காத நிலை அண்மைக் காலங்களில் இருந்து வந்துள்ளது

இப்பிரச்சினையை தீர்க்கும் முகமாக காலை 6.00மணி தொடக்கம் மாலை 6 00மணி வரை பஸ்நிலையப்பகுதி மரக்கறிச் சந்தைப்பகுதி, தாராக்குளம் வீடமைப்புத் திட்டப் பகுதிஆகியஇடங்களில் குழாய் மூலம் பாதுகாப்பான குடிநீர் மாநகராட்சி மன்றத்தால் வழங்கப்பட்டு வருகின்றது.

எவ்வளவோ பிரச்சினைகளுக்கு மத்தியில் மாநகராட்சிமன்றம் இச்சேவையை வழங்கிவருவதால், இந்நீரை விரயமாக்காது குடிப்பதற்கு மட்டும் பயன்படுத்தி சேவை தொடர பூரண ஒத்துழைப்பை வழங்குமாறு யாழ் மாநகராட்சி மன்றச் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் இ தெய்வேந்திரன் கேட்டுக்கொள்கின்றார் (24

## பௌத்த விகாரைகளில்

நினைவு கூருகின்றோம்.

(கொழும்புத்துறை)

நல்லூர் லயன்ஸ் கழகம் வசதிகுறைந்தோருக்கான இலவச வைத்திய சேவையைத் தற்போது நடாத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

இச்சேவையின் ஒரு பகுதியாக அண்மையில் நல்லூர் செம்மணி வீதியில் உள்ள மெடி எயிட்ஸ் மருத்துவமனையில் வைத்திய சிகிச்சையும், வைத்திய ஆலோசனையும் வழங்கப்பட்டது என லயன்ஸ் கழகத் தலைவர் தெரிவித்துள்ளார். (24)

## நன்றி தெரிவிப்பு

(நமது நிருபர்)

அண்மைக் காலத்தில் சிறிலங்கா இராணுவம் வலிகாமம் பகுதியில் மேற்கொண்ட ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளால் தமது உடைமைகளை இழந்து அகதி முகாம்களில் தஞ்சமடைந்துள்ள மக்களுக்கு சமைத்த உணவுகளையும், உடைகளையும் சில அமைப்புக்கள் வழங்கி உதவின. இவ்வாறு உதவிகளை வழங்கிய யாழ். இந்து சாரணர் இயக்கம், இன்ரக்கிளப் சேவைக் கழகம், சுதா பேக்கரி மற்றும் உதவி செய்த ஏனையோருக்கும் இடம்பெயர்ந்தோர் சார்பாகத் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தனது நன்றியைத் தெரிவித்துள்ளது.

(வடமராட்சி)

கொளுந்து விட்டு எரிகின்ற எமது இலட்சியப்போரை கபளீகரம் செய்ய முனையும் எந்த சக்தியும் இந்த மண்ணிலே நிலையாக வாழ முடியாது இந்த உண்மை எமது போராட்ட வரலாற்றின் மூலம் பல்வேறு சந்தர்ப்பங்களில் நிரூபித்துக் காட்டப்பட்டுள்ளது

இவ்வாறு கரணவாய் சோளங்கன் சனசமூக நிலையத்தில் நடைபெற்ற போர்க்காலகருத்தரங்கில் வடமராட்சி கலை பண்பாட்டுக்கழக பொறுப்பாளர் திரு. பாஸ்கரன் தெரிவித்தார்.

ஏற்படுகின்ற இன்னல்கள் இழப்புகளைக் கண்டுசோர்ந்து விடாமல் சோதனைகளைக் கண்டு விரக்தி கொள்ளாமல் எமது சுதந்திர விடிவுக்காக அனைவரும் ஒருங்கிணைந்து உழைக்க வேண்டும்.

அவர் தொடர்ந்து உரையாற்றும் போது இந்த மண்ணிலே வாழ்கின்ற ஒவ்வொருவரும் இந்தப் போராட்டத்தின் பக்கவேர்கள் உங்களின் பங்களிப்பினால் தான் உறுதியுடன் போராட்டம் இன்று முன்னெடுத்துச் செல்லப்படுகிறது இதனால் உலக அரங்குகள் பலவும் எமது உரிமைப் போரை உற்றுப் பார்க்கின்ற

## - பாஸ்கரன் பேச்சு

ஒரு உன்னதமான நிலை தோற்றம் பெற்றுள்ளது இந்நிலைமை கண்டு சிறிலங்கா அரசு செய்வதறியாது திகைத்துக் கொண்டிருக்கிறது பீதி உறுகின்றது இந்த உலக அரங்குகளின் பார்வை தமிழீழ விடுதலைப்போராட்டத்திற்கு சாதகமாக அமைந்து விடுமோவென்றுஅஞ்சுகின்றது

இந்நிலைமையை தன் பக்கம் திசை திருப்பிவிட இந்த மண்ணிலே ஒரு மிகப்பெருத்த யுத்தத்தை தொடர்ந்து எமது மக்களை இந்தப் போராட்டத்திலிருந்துபிரித்து விட கங்கணம் கட்டி நிற்கிறது இந்த உண்மையை புரிந்து கொண்டு எமது உரிமைப் போராட்டத்தின் உயர்வுக்கு நாம் அனைவரும் ஒருங்கிணைந்து உழைக்க முன்வர வேண்டும்.

அதனைத்தொடர்ந்து கரவெட்டி வட்டவை பொறுப்பாளர் திரு. மணிவண்ணன் தனதுரையில் சிறிலங்கா அரசாங்கத்தின் திட்டமிட்டு நடத்தப்பட்டு வருகின்ற இந்த யுத்தத்தினை நாமும் வெற்றி கொள்ள வேண்டும். இந்த வெற்றிக்கு ஆண் பெண் வயோதிபர் முதியேர் என்ற வேறுபாடின்றி அனைவரும் ஒத்துழைப்பு வழங்குதல் அவசியம் (82)

## பௌத்த விகாரைகளில் திருட்டுகள் அதிகரிப்பு

பௌத்த விகாரைகளில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்து வருவதாக பொலிசார் தெரிவிக்கின்றனர்.

கிரிபாவே பொலிஸ் பகுதியில் இருக்கும் வெரகல் விகாரையில் வழிபாட்டுத் தலத்தின் அத்திவாரத்தை வெட்டி அங்கு புதைக்கப்பட்டிருந்த தங்க வெங்கல நாணயங்களையும், வேறும் பெறுமதி வாய்ந்த பொருள்களையும் திருடர்கள் கொள்ளையடித்திருப்பதாக விகாராதிபதி பொலிசாரிடம் முறையிட்டுள்ளார்.

இதேபோல வட்ட கெதர சுதர்சன ராமய பெரதுகல் விகாரையில் கொள்ளையிட எடுக்கப்பட்ட முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளது.

பௌத்த விகாரைகளின் புத்தர் சிலைகளுக்கும், தூபிகளுக்கும் அடியில் தங்க ஆபரணங்கள் நாணயங்கள், விக்கிரகங்கள் போன்ற புராதனமான பெறுமதிமிக்க பொருள்கள் புதைத்து வைத்திருக்கப்படுவது தெரிந்ததே

...சடி செய்யப்படுவதாக பொலிசாருக்கு கிடைத்த முறைப்பாடுகளிலிருந்து தெரிய வந்துள்ளது.

இத்தகைய மோசடி சம்பவங்களால் மலையகப் பகுதிகளில் வீணான சண்டை சச்சரவுகளும் தற்கொலைச் சம்பவங்களும் ஏற்படுகின்றன என்றும் தெரிய வருகிறது

வெளிநாட்டு தொழில் வாய்ப்பு பெறுவதில் மோகம் கொண்ட யுவதிகளும் குடும்பப் பெண்களும் தங்கள் தங்க ஆபரணங்களை அடகு வைத்தும், வட்டிக்குப் பணம் பெற்றும் முகவர் நிலையங்களுக்கு பணம் செலுத்தி இறுதியில் தொழிலும் இல்லாமல், பணத்தையும் மீளப்பெற முடியாமல் தவிக்கும்சம்பவங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறதாம்.

முகவர்நிலையங்களுக்கு எதி...

## கண்காட்சி

(வடமராட்சி கிழக்கு)

கல்வி கண்காட்சி ஒன்று விடுதலைப் புலிகள் மாணவ அமைப்பின் அனுசரணையுடன் நடைபெறவுள்ளது

எதிர்வரும் 13-ம. 14-ம் திகதிகளில் நாகர்கோயில் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன (36)

## பருத்தித்துறை பிரதேச சபை நூலக நேரத்தில் மாற்றம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரதேச சபையின் புலோலி பொது நூலகம் கடந்த முதலாம்திகதி தொடக்கம் காலை 8 30 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை தொடர்ந்து திறந்திருக்கும் என தெரிவிக்கப்படுகின்றது.

இந் நூலகத்தை வாசகர்களின் கோரிக்கையின் பேரில் பகல் முழுவதும் திறந்துவைக்குமாறு பருத்தித்துறை பிரதேசசபையின் விசேட ஆணையாளர் திரு. செ ஸ்ரீனிவாசன் பணிப்புரை விடுத்துள்ளார்

நூலகம் பகல் வேளை 1 மணி தொடக்கம் 3 மணி வரை பூட்டப்பட்டிருப்பதால் வாசகர்களுக்கு அசௌகரியம் ஏற்படுவதாகவும் எனவே இந்நூலகத்தை பகலில் மூடாமல் தொடர்ந்து திறந்து வைத்திருக்குமாறு இப்பகுதி மக்கள் நீண்ட காலமாக கோரிக்கை விடுத்து வந்தமையின் பேரில் இந்நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது (25)

### தேர் உற்சவம்

தெல்லிப்பழை சிறி துர்க்கா தேவி தேவஸ்தான தேர் உற்சவம் நாளை காலை 8.30 மணிக்கு நடைபெறும் என கோவில் நிர்வாக சபை அறிவித்துள்ளது.

காலை 7 00மணிக்கு வசந்த மண்டப பூசையும் 8 00மணிக்கு அம்பாள் கோபுர வாயில் தரிசனம் செய்து 8 30 மணிக்கு தேரில் ஆரோகணித்து 9 00 மணிக்கு இரதபவனி வருவார் எனவும் நிர்வாகசபைதெரிவித்துள்ளது.

## யாழ். நகரப் பகுதிகளில் குடிநீர் விநியோகம்

யாழ்.நகரின் மத்திய பகுதியில் பல்வேறு அலுவல்களின் நிமித்தம் நகர மத்திக்கு வரும் மக்கள் தாகசாந்தி செய்வதற்காக பாதுகாப்பான குடிநீர் கிடைக்காத நிலை அண்மைக் காலங்களில் இருந்து வந்துள்ளது

இப்பிரச்சினையை தீர்க்கும் முகமாக காலை 6.00மணி தொடக்கம் மாலை 6 00மணி வரை பஸ்நிலையப்பகுதி மரக்கறிச் சந்தைப்பகுதி, தாராக்குளம் வீடமைப்புத் திட்டப் பகுதிஆகியஇடங்களில் குழாய் மூலம் பாதுகாப்பான குடிநீர் மாநகராட்சி மன்றத்தால் வழங்கப்பட்டு வருகின்றது.

எவ்வளவோ பிரச்சினைகளுக்கு மத்தியில் மாநகராட்சிமன்றம் இச்சேவையை வழங்கிவருவதால், இந்நீரை விரயமாகாது குடிப்பதற்கு மட்டும் பயன்படுத்தி சேவை தொடர பூரண ஒத்துழைப்பை வழங்குமாறு யாழ் மாநகராட்சி மன்றச் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் இ தெய்வேந்திரன் கேட்டுக்கொள்கின்றார். (24


## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி

வீர ஜனனம்

23 - 01 - 1972



வீரச் சாவு

01 - 09 - 1990

### 2ஆம்லெப். கனோஜி

(பாலகிருஸ்ணன் கமலநாதன்)

திதி 07-09-1992

நாமிருக்க நாடில்லை<br>
நாமிருக்க நாடமைக்க<br>
வேங்கைகள் அணியில் வீறுடன் இணைந்த<br>
எங்களின் புதல்வனே!<br>
தேசத்தைக் காத்திடவென்றே<br>
முல்லை மண்ணில் வீழ்ந்துதான் போனாய்<br>
வில்லிலிருந்து புறப்பட்ட அம்பு போல<br>
எம் நினைவில் எழுந்து நிற்கிறாய்!

புளியம்பொக்கணை - குடும்பத்தினர்

(5005)



## Computer Programming in Basic Language

4 மாதங்கள்

சனி, ஞாயிறு வகுப்புகள்

**ஆரம்பம்: 12.09.1992** 8-30மணி

Lectures by: S. P. SIVAPATHASUNDARAM<br>
*M. I. D. P. M. (Lond.)*

★ கட்டணம் தவணைமுறையில்<br>
★ அச்சடித்த பாடக் குறிப்புகள் இலவசம்<br>
★ கூடிய செய்முறைப் பயிற்சி<br>
★ பயிற்சி முடிவில் பெறுமதி வாய்ந்த சான்றிதழ்

**SCHOOL OF BUSINESS ADMINISTRATION**

*(Pioneers in Computer Education)*

16, 3rd CROSS, STREET JAFFNA.

(சி, 5015)



## நினைவு கூருகின்றோம்... 1992 - 09 - 07

1987 ஆம் ஆண்டு இதே தினத்தில் வவுனியா தம்பனைப் பகுதியில் தேசவிரோத சக்திகள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது வீரச்சாவெய்திய -

**கொலின்ஸ், லூக்** (கண்ணாட்டி - வவுனியா)

வவுனியா - குளவிசுட்டான் பகுதியில் தேசவிரோத சக்திகள மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -

**அமீர் அமல்** (தம்பையா ரவிச்சந்திரன் - 68, 2 ஆம் படிவம், வவுனிக்குளம் - முல்லைத்தீவு)

1988ஆம் ஆண்டு வவுனியா - செட்டிகுளம் பகுதியில் இந்தியப் படையினருடனான நேரடிச் சமரில் வீரச்சாவெய்திய -

**யோகசிவம்** (அழகர் பரமநாதன் கணேசமூர்த்தி - நீலியமோட்டை - மன்னார்)

1990 ஆம் ஆண்டு முல்லைத்தீவு - மாங்குளம் பகுதியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட விமானத் தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**அருள்** (வேலுப்பிள்ளை சுகுமார்-மருதோடை, நெடுங்கேணி - மணலாறு)

மட்டக்களப்பில் சிறிலங்காப் படையினரால் படுகொலை செய்யப்பட்ட குமாரவேலியர் கிராமத்தைச் சேர்ந்த 3 தமிழர்கள் - முஸ்லிம் காடையர்களினால் சுட்டுக் கொல்லப்பட்ட நொச்சிமுனை, கலைமகள் வீதியைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

1991ஆம் ஆண்டு மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**முகமத்** (சிவஞானம் சுபாகரன் - விநாயகபுரம், திருக்கோயில் - அம்பாறை)

**வசந்தா** (ஜெயவதனி சண்முகநாதன் - நாவலர்வீதி, மாதகல் - யாழ்ப்பாணம்)

**லெப். குட்டி** (வில்வராஜா ரவிச்சந்திரன் - தனங்கிளப்பு, சாவகச்சேரி - யாழ்ப்பாணம்)

ஆகியோரை இந்நாளில்<br>
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி/5013)

### சிந்தனைக்கு

ஆசை அறுவது எந்நாள்?
மோகம் முப்பது எந்நாள்?
— தமிழ்ப்பழமொழி

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 07-09-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05

## "அபத்தமானது"

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவியும், முன்னாள் பிரதமருமான சிறிமாவோ பண்டார நாயக்காவை அரசியலில் இருந்து விலகி ஓய்வெடுத்துக் கொள்ளும்படி மல்வத்தைப் பீடாதிபதி ரம்புக்வெல விபஸ்ஸி ஆலோசனை வழங்கியுள்ளார். "உங்களுக்கு வயதாகிவிட்டது. ஆகவே இனிக் கூட்டங்களுக்குச் செல்லவேண்டாம் கூட்டங்களில் உரையாற்றுவதை தவிர்த்துக் கொள்ளுங்கள்" எனவும் ரம்புக்வெல விபஸ்ஸி மகாநாயக்கதேரோ குறிப்பிட்டுள்ளார்.

சிறிமாவோ பண்டார நாயக்காவிற்கு வயதாகிவிட்டது என்பதும், அவர் உடல்நலக் குறைவிற்கு உள்ளாகியுள்ளார் என்பதும் உண்மைதான். சாதாரண நிலையில் மகாநாயக்க தேரோ வழங்கிய ஆலோசனையும் ஏற்புடையதுதான். ஆனால், மகாநாயக்க தேரோ ஓர் பரந்த நல்நோக்கில் இவ் ஆலோசனையை வழங்கினாரா? அல்லது சிறிலங்காவில் அரசியல் மாற்றத்தை உருவாக்கும் நோக்கில் இதைக் கூறினாரா என்பதைத் தெளிவாகக் கூறிவிட முடியாது.

சிறிமாவோ பண்டார நாயக்க, அரசியலில் இருந்து ஓய்வு பெறுவதனை மகாநாயக்கர் மட்டுமல்ல, சிறிலங்கா சுதந்திரக்கட்சியிலும் பலர் விரும்புகின்றனர். மகாநாயக்கரின் ஆலோசனை சுதந்திரக் கட்சியினர் ஒரு பிரிவினரின் கருத்தைப் பிரதிபலிக்குமானால் சுதந்திரக்கட்சியில் இளைய தலைமுறையினர் முதன்மை பெற வாய்ப்பளிக்கும். அது அரசியலின் போக்கை ஓரளவிற்காயினும் மாற்றக்கூடும்.

மாறாக, திரு பிரேமதாஸாவின் அரசிற்கான எதிர்ப்பைத்தணியச் செய்யும் முயற்சியாகவும் மகாநாயக்கதேரோவின் ஆலோசனை இருக்கலாம். அதாவது, சிறிமாவோ மீதான பற்றோ, அன்றி சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கு புத்துயிர்ப்பு அளிக்கும் நோக்கிலோ அன்றி, திரு. பிரேமதாஸாவிற்கு ஆதரவளிக்கும் நோக்கிலோ இவ் ஆலோசனை செய்யப்பட்டிருக்கலாம்.

இதில் எதுவானாலும் சரி மகாநாயக்க தேரோவின் இக்கூற்று மூலம் சிறிமாவோ பண்டாரநாயக்காவின், ஏன் ஒரு சாதாரண அரசியல் வாதியின் மனோநிலையைக்கூட அவர் புரிந்து கொள்ளவில்லை எனக் கூறலாம். ஏனெனில், அரசியல்வாதிகள் எப்பொழுதும் ஓய்வுபெறுவதில்லை அதிலும் மூன்றாம் உலகநாடுகளில் அரசியல் வாதிகள் அது குறித்துச் சிந்திப்பதே இல்லை.

அவ்வாறு இல்லாமல் அரசியல் வாதிகள் ஓய்வு பெறுவதானால் அது நிர்ப்பந்தத்தின் காரணமாக ஏற்படுவதே ஒழிய அவர்கள் தாமாக ஒருபோதும்

# தியத்தலாவையில் எரிமலை; ஆய்வாளரிடையே முரண்பாடு

(பண்டாரவளை)

தியத்தலாவையில் ஏற்பட்டுள்ள எரிமலைக் குழம்பு குறித்து ஆய்வாளர்கள் மத்தியில் முரண்பட்ட கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

தியத்தலாவ இராணுவ முகாமிற்கு அருகில இருக்கும் கோணகந்த மலைப் பகுதியில் அடிக்கடி புகை எழுவது குறித்து பூகற்பவியலாளர்கள் இன்று முழுமையான ஆராய்ச்சி நடத்தவுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இப் புகை ஆபத்தானதாய் இருக்கலாம்என பேராதனைப் பல்கலைக்கழக பூகோளபீடப் பேராசிரியர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இது எரிமலையாக மாறி வெடிக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் இல்லையென பூகற்பவியல் பிரதிப் பணிப்பாளர் டி. ஓ. கஸ்தி ஆராய்ச்சி தெரிவித்தார்

கோணகந்த மலைப்பிரதேசம் தியத்தலாவை இராணுவ முகாமிற்கு சொந்தமான காட்டுப் பிரதேசமாகும். இப் பகுதிக்கு கடந்த முதலாம் திகதி மாடுமேய்க்கச் சென்ற சிறுவர்கள் அப் பகுதியில் புகை வருவதைக் கண்டு இராணுவமுகாமிற்கு அறிவித்தனர்.

சுமார் 35 பேச்சஸ் நிலம் நான்கு அல்லது ஐந்து அடி இறங்கி இருப்பதையும் அப் பகுதியில் இருந்த மரங்கள் கருகிய நிலையில் இருப்பதையும்

அப்பகுதியின் உஷ்ண நிலை 400 பரனைட்டாக இருக்கின்றது என்றும், ஏதாவது ஒரு பொருளை போட்டால் அது கருகி புகை வருவதையும் காணக்கூடியதாக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த இடத்தில் செங்கல் சுடும் சூளைப்பகுதியில் இருந்து வரும் மண் சுடும் நாற்றம் போன்று நெடி வருவதாகவும், இப்பிரதேசத்தை இப்போது இராணுவத்தினர் தடை செய்யப்பட்ட பிரதேசமாக பிரகடனப் படுத்தி உள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

எரிமலை ஏற்படக் கூடியது எனக் கருதப்படும் துவாரம் ஒன்றரை அடிக்கு தாழ்ந்துள்ளது என்றும் 600 சதுர மீற்றர் விஸ்தீரணமான அந்தப் பகுதியே சற்று நிலத்தில் இறங்கியுள்ளது என்றும்,

நிலத்துக்கு மேல் 60°C முதல் 75 C வரையான உஷ்ணம் நிலவுவதாகவும் நிலத்துக்குக் கீழ் 245 C வெப்பநிலை நிலவுவதாகவும் கூறப்படுகிறது.

மேலும் பூகம்பம் வெடிக்கக் கூடிய ஆபத்து ஏற்படின் மலையடி வாரத்தில் வாழும் மக்களை வெளியேற்றி பாதுகாப்பான இடங்களுக்கு கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் கூறப்பட்டுள்ளது.

### தையல் பயிற்சி ஆரம்பம்

அச்சுவேலி கிராமசேவையாளர் பிரிவில் தையல்பயிற்சி நிலையம் ஒன்று அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக் கிளையினர் இத்தையல் பயிற்சி நிலையத்துக்கு தேவையான இரண்டு புதிய தையல் இயந்திரங்களை வழங்கியுள்ளதாக கிளையின் செயலாளர் திரு. இ. மயில்வாகனம் தெரிவித்துள்ளார்.

அச்சுவேலி புத்தூர் கிராமங்களைச்சேர்ந்த பல படித்த யுவதிகள் இந் நிலையத்தில் பயிற்சி பெற்று வருகின்றனர் என அவர் தெரிவித்துள்ளார்

## வடக்கு, கிழக்கு

## ஆசிரியர் இடமாற்றம் பற்றி அமைச்சர் பணிப்புரை

வடக்கு கிழக்கில் இருந்து நாட்டின் ஏனைய பகுதிகளுக்கு இடமாற்றம் பெறத் தகுதியுடைய ஆசிரியர்களை வெற்றிடமுள்ள பாடசாலைகளுக்கு நிரந்தர இடமாற்றம் செய்யும்படி கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி இராஜமனோகரி புலேந்திரன் கல்விச் சேவை ஆணைக்குழுவிற்கு பணிப்புரை வழங்கியுள்ளார் எனத் தெரியவருகிறது.

## போரூட் உதவி

[கொழும்புத்துறை]

வடமராட்சி கிழககில் தஞ்சமடைந்து பத்து அகதிகள் முகாம்களில் உள்ள சுமார் எண்ணூறு மாணவர்களுக்கு வடமராட்சி போரூட் நிறுவனம் பாடசாலைச் சீருடைகளை வழங்கவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (24)

## கொலையாளிகளை விட்டு அரசு எம்மைத் துரத்துகிறது

### - சர்வோதயத் தலைவர் ஆரியரத்னா

(மாத்தறை)

கொலையாளிகளும், போதைப் பொருள் காரர்களும் நாட்டில் சுதந்திரமாக அலைந்து திரிகின்றார்கள் ஆனால் அவர்களையெல்லாம் விட்டுவிட்டு அரசு சர்வோதயத்தைத் துரத்துகின்றது என சர்வோதயத்தலைவர் ஏ. ரி. ஆரியரத்னா தெரிவித்துள்ளார்.

செய்திப் பத்திரிகை அல்லது வெகுசனத் தொடர்புச் சாதனங்கள் மூலம் மக்களுக்கு உண்மையை இன்று விளக்க இடமில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

## அரச கரும மொழி அமுல் அவதானிக்கத் திட்டம்

(கொழும்பு)

அரச கருமமொழிகள் சீராக அமுல் செய்யப்படுகிறதா என்பதனை அவதானிக்க கொழும்பில் ஆய்வுத் திட்டமொன்றை இன்று முதல் உத்தியோக மொழி ஆணைக்குழு ஆரம்பிக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சிங்களமும், தமிழும் நடைமுறையில் சீராக அமுல் செய்யப்படுகின்றதா என்பதனை இந்த ஆய்வுமூலம் கண்டறிந்து கொள்ளலாம் என்றும்,

இந்த ஆய்வுகள் கொழும்பு மாநகரசபை எல்லைக்குள் நடைபெறும் என்றும், மூன்று மாதகாலங்களுக்கு இந்த ஆய்வு மேற்கொள்ளப்படும் என்றும், கொழும்பிலுள்ள ''மாக்கா'' நிறுவனம் உத்தியோகமொழி ஆணைக்குழுவின் சார்பில் இந்த ஆய்வைமேற்கொள்ளும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

### பரிசளிப்பு விழா

(வடமராட்சி கிழக்கு)

மேஜர் முரளி ஞாபகார்த்த இறுதிப் போட்டிகளும், பரிசளிப்பு வைபவமும், வடமராட்சி கோட்டத்தில் எதிர்வரும் 14 ஆம் திகதி இடம் பெறும்.

## அக்கரைப்பற்று பகுதியில் அகதிகள் குடியிருப்பு சேதம்

(அக்கரைப்பற்று)

அக்கரைப் பற்றுப் பகுதியில் தமிழ் மக்கள் அகதிகளாகத் தங்கியுள்ள கொட்டில்கள் மிகவும் பரிதாபத்துக்குரிய நிலையில் சேதமுற்றிருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இப் பகுதியில் வீசும் பலத்த கச்சான் காற்றினால் குடிசைகளின் கூரைக் கிடுகுகள் சேதமடைந்திருப்பதோடு, மழை பெய்தால் இக்கொட்டில்களில் வாழ முடியாத நிலை ஏற்படும். அதே வேளை தற்சமயம் நிலவும் கடும் வரட்சியும் இங்குள்ள மக்களை கடுமையாகப் பாதித்துள்ளது.

# 1961 ஆம் ஆண்டுவரை குவைத் என்ற நாடே இல்லை

1961-ஆம் ஆண்டு வரை குவைத் என்றொரு நாடே இருந்ததில்லை என்றும், குவைத் ஈராக்கின் ஒரு பகுதியே என்றும் ஈராக்கின் உதவி ஜனாதிபதி ஜமதார் கூறினார்.

இந்தோனேசியத் தலைநகர் ஜகார்த்தாவில் நடைபெறும் அணிசேரா நாடுகள் உச்சி மாநாட்டில் கலந்து கொள்ளும் ஈராக்கின் உப ஜனாதிபதி ஜமதார் இவ்வாறு

குவைத் ஈராக்கின் ஒருபகுதி என்ற வரலாற்று உண்மையை உலகு மறக்கக்கூடாது ஆனால் குவைத் மீது ஈராக் ஊடுருவும் எண்ணம் எதையும் கொண்டிருக்கவில்லை என்றும் -

மேலும், ஈராக் குவைத் பாதுகாப்புப் படையினரை இன்றும் யுத்தக் கைதிகளாகப் பிடித்து வைத்திருக்கும் குற்றச் சாட்டை மறுத்திருக்கும் அவர், அணிசேரா நாடுகள் குழுவொன்றை அனுப்பி இத

என்றும் குறிப்பிட்டார்.

ஈராக் மீது பொருளாதாரத் தடையைத் தொடர்ந்தவாறே, மக்களுக்கு நிவாரணப்பணியில் ஈடுபடுவதாகக் கூறி ஈராக் வருகின்ற ஐ.நா. சபையின் நிவாரணக் குழுவினர் அனைவரும் மேற்கத்திய நாட்டவர்கள் என்றும், இவர்கள் உளவாளிகள் என்றும், இவர்களை ஈராக் நாட்டினுள் அனுமதிக்காது என்

## ஐ. நா.விற்கு நிதித்தட்டுப்பாடு பூட்டர்ஸ்காலி அறிவிப்பு

ஐ நா அமைப்பிற்கு பெரும் நிதித் தட்டுப்பாடும், நம்பகத் தன்மைக் குறைவும் ஏற்பட்டுள்ளதாய் ஐ நாவின் தலைமைச் செயலர் பூட்டர்ஸ் காலி தெரிவித்துள்ளார்.

ஐ நாவிடம் இருந்துஉலகம் பெருமளவில் எதிர்பார்த்த போதும், ஐ நாவிற்கு நிதி வழங்க அவை தயாராய் இல்லை. பல நாடுகள் ஐ நாவிற்குச் செலுத்த வேண்டிய மொத்தத் தொகை சுமார் 200 கோடி டாலர்களாகும்.

போர்க் குமுறல் முடிந்திருக்கும் இத்தருணத்தில் ஐ நாவின் பணி குறிப்பிடத்தக்க

சமாதானப் பணிகளை மேற்கொண்டுள்ளது எனவும் ஐ.நாவின் தலைமைச் செயலர் தெரிவித்துள்ளார்.

### சூரியசக்தி மூலம் புள்ளி விபரசேமிப்பு

சூரிய சக்தி மூலம், நீரைச் சூடேற்றுதல், உலர வைத்தல் புள்ளி விபர சேகரிப்பு மையம் அமைத்தல் ஆகிய துறைகளில் சூரிய சக்திப் பயன்பாட்டை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளில் ஒத்துழைப்பை மேற்கொள்ள இந்தியா உட்பட 15 நாடுகள் அங்கம் வகிக்கும் சூரிய சக்தி நிபுணர்கள் குழு

இதில் எதுவானாலும் சரி மகாநாயக்க தேரோவின் இக்கூற்று மூலம் சிறிமாவோ பண்டாரநாயக்காவின், ஏன் ஒரு சாதாரண அரசியல் வாதியின் மனோ நிலையைக்கூட அவர் புரிந்து கொள்ளவில்லை எனக் கூறலாம். ஏனெனில், அரசியல்வாதிகள் எப்பொழுதும் ஓய்வுபெறுவதில்லை அதிலும் மூன்றாம் உலகநாடுகளில் அரசியல் வாதிகள் அது குறித்துச் சிந்திப்பதே இல்லை.

அவ்வாறு இல்லாமல் அரசியல் வாதிகள் ஓய்வு பெறுவதானால் அது நிர்ப்பந்தத்தின் காரணமாக ஏற்படுவதே ஒழிய அவர்கள் தாமாக ஒருபோதும் ஓய்வுபெறுவதில்லை. முன்னாள் சிறிலங்கா ஜனாதிபதி ஜே ஆர். ஜெயவர்த்தனா ஓய்வுபெறுவதாக அறிவித்து அரசியலில் இருந்து 'ஓரளவு' ஒதுங்கி இருப்பினும் அவர், தமது சுயவிருப்பின் பேரில் ஓய்வு பெற்றார் என்று சொல்வதற்கில்லை. அன்று அவருக்கிருந்த அரசியல் நெருக்கடிகளும் நிர்ப்பந்தங்களுமே அவரை அரசியலில் இருந்து ஒதுங்க நிர்ப்பந்தித்தது. இந்திய இராணுவத்தின் வருகையால் அன்றைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா எதிர்பார்த்ததிற்கு மாறாக தென்னிலங்கையில் இரத்த ஆறு ஓடியது. வன்முறை ஜே ஆர்.ஜெயவர்த்தனாவின் அரசை ஆட்டம் காணச் செய்தது. அதே வேளை, அரசியல் அமைப்புச்சட்டம் ஜே.ஆர் ஜெயவர்த்தனாவின் பதவி நீடிப்பிற்குத் தடையாக இருந்தது. ஆனால் இது ஜே ஆர். ஜெயவர்த்தனாவிற்கு பெரியதொன்றல்ல. ஆனால், இதனைச் சாட்டாக வைத்து அரசியலில் இருந்து ஒதுங்கப் போவதாக ஜே. ஆர். ஜெயவர்த்தனா அறிவித்தார்.

ஆனால், அவரது அரசியல் அபிலாசைகள் இன்னும் தீர்ந்த பாடில்லை. இன்றும் அரசியல் நான் பேசவிரும்பவில்லை எனக்கூறிக் கொண்டே அரசியல் பேசும் நடவடிக்கையில் ஜே ஆர். ஜெயவர்த்தனா இறங்கியுள்ளார். இந் நிலையில் சிறிமாவோ பண்டாரநாயக்கா, அரசியல் அபிலாசைகளிலும், அதன் மூலம் கிடைக்கும் என எதிர்பார்க்கும் சிறிலங்காவின் உயர்பதவியையும், அதிகாரத்தையும் துறக்குமாறு கோருவதை எவ்வாறு ஏற்றுக்கொள்ள முடியும்? அதற்கு அவர் எவ்வாறு ஒப்புவார்.

முற்றும் துறந்த ஞானிகளாகவும், ஆசை அபிலாசைகளைக் கைவிட்டு பௌத்த பெருமானின் போதனைகளின் அடிப்படையில் நடக்கும்பிக்குமார்களினாலேயே ஏன்ரம்புக்வெலவிபஸ்ஸிமகாநாயக்க தேரோக்களினாலேயே அரசியலைக்கைவிட முடியாத நிலையும், மற்றைய இனமக்கள் மீது அன்பையும், கருணையையும் காட்ட முடியாத நிலையும் இருக்கும் போது பாவம், அபிலாசைகள் நிறைந்த பெண்ணான சிறிமாவோ பண்டார நாயக்காவினால் எவ்வாறு அரசியல் வாழ்க்கையைத் துறக்க முடியும்?

தள்ளாத வயதிலும், சிறிலங்காவின் உயர் பதவியைப் பிடிக்க தன்னாலான பகீரதப் பிரயத்தனத்தை மேற்கொண்டிருக்கும் சிறிமாவோ பண்டாரநாயக்காவைப் பொறுத்து மகாநாயக்க தேரோவின் ஆலோசனை அபத்தமானது. சில வேளை அவரது பார்வையில் தமக்கு எதிராக மகாநாயக்க தேரோ மேற்கொண்ட சதி நடவடிக்கை எனவும் இருக்கலாம்.

---

1961-ஆம் ஆண்டு வரை குவைத் என்றொரு நாடே இருந்ததில்லை என்றும், குவைத் ஈராக்கின் ஒரு பகுதியே என்றும் ஈராக்கின் உதவி ஜனாதிபதி ஜமதார் கூறினார்.

இந்தோனேசியத் தலைநகர் ஜகார்த்தாவில் நடைபெறும் அணிசேரா நாடுகள் உச்சி மாநாட்டில் கலந்து கொள்ளும் ஈராக்கின் உப ஜனாதிபதி ஜமதார் இவ்வாறு கூறினார்.

குவைத் ஈராக்கின் ஒருபகுதி என்ற வரலாற்று உண்மையை உலகு மறக்கக்கூடாது ஆனால் குவைத் மீது ஈராக் ஊடுருவும் எண்ணம் எதையும் கொண்டிருக்கவில்லை என்றும் -

மேலும், ஈராக் குவைத் பாதுகாப்புப் படையினரை இன்றும் யுத்தக் கைதிகளாகப் பிடித்து வைத்திருக்கும் குற்றச் சாட்டை மறுத்திருக்கும் அவர், அணிசேரா நாடுகள் குழுவொன்றை அனுப்பி இதனைச் சோதனையிடலாம் என்றும் குறிப்பிட்டார்.

ஈராக் மீது பொருளாதாரத் தடையைத் தொடர்ந்த வாறே, மக்களுக்கு நிவாரணப்பணியில் ஈடுபடுவதாகக் கூறி ஈராக் வருகின்ற ஐ.நா. சபையின் நிவாரணக் குழுவினர் அனைவரும் மேற்கத்திய நாட்டவர்கள் என்றும், இவர்கள் உளவாளிகள் என்றும், இவர்களை ஈராக் நாட்டினுள் அனுமதிக்காது என்றும் அவர் குறிப்பிட்டார்.

மைச் செயலர் பூட்டர்ஸ் காலி தெரிவித்துள்ளார்.

ஐ நாவிடம் இருந்துஉலகம் பெருமளவில் எதிர்பார்த்த போதும், ஐ. நாவிற்கு நிதி வழங்க அவை தயாராய் இல்லை. பல நாடுகள் ஐ நாவிற்குச் செலுத்த வேண்டிய மொத்தத் தொகை சுமார் 200 கோடி டாலர்களாகும்.

யோர்க் குமறல் முடிந்திருக்கும் இத்தருணத்தில் ஐ நாவின் பணி குறிப்பிடத்தக்களவு அதிகரித்துள்ளது. சென்ற ஆண்டு முதல் ஐ நா. பல

## சூரியசக்தி மூலம் புள்ளி விபரசேமிப்பு

சூரிய சக்தி மூலம், நீரைச் சூடேற்றுதல், உலர வைத்தல் புள்ளி விபர சேகரிப்பு மையம் அமைத்தல் ஆகிய துறைகளில் சூரிய சக்திப் பயன்பாட்டை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளில் ஒத்துழைப்பை மேற்கொள்ள இந்தியா உட்பட 15 நாடுகள் அங்கம் வகிக்கும் சூரிய சக்தி நிபுணர்கள் குழு கேட்டுக் கொண்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

---

## பிரிட்டிஷ் அரச குடும்பம் வரு.வரி செலுத்த நிர்ப்பந்தம்

வருமான வரி செலுத்த வேண்டும் என்பதில் பிரிட்டிஷ் அரச குடும்பங்களுக்கு நிர்ப்பந்தங்கள் அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது

'சண்' பத்திரிகை நடத்திய அபிப்பிராய வாக்கெடுப்பின்படி 90 சதவீதத்தினர் அரச குடும்பம் வரி செலுத்த வேண்டும் எனக் கூறியுள்ளனர். 83 சதவீதத்தினர் வரியிறுப்பாளரின் பணத்தை அரச குடும்பத்துக்கு அளிக்கக் கூடாது எனக் கூறியுள்ளனர்.

யோர்க் சீமாட்டி வரியிறுப்பாளரின் பணத்தில் விடுமுறையை கழித்துக் கொண்டிருந்த போது அவரது பொலிஸ் மெய்பாதுகாவலர்கள் பின்னணியில் சூரியஸ்நானம் செய்து கொண்டிருக்கும் படங்களை டெயிலி மெயில் பத்திரிகை பிரசுரித்து இந்தச் செலவு பொதுப்பணம் என்பதை சுட்டிக் காட்டியிருந்தது

பேர்ஜிக்கும் அவரது கணவர் அன்ட்ரூவுக்கும் ஆண்டு ஒன்றுக்கு 4,95,000 டொலர் (இரண்டு கோடி 18 லட்சம் கொடுக்கப்படுகிறது மகாராணிக்கு 1,58,60,000 டொலர் (70 கோடி ரூபா) அளிக்கப்படுகிறது. மகாராணிக்கு 991 கோடி டொலர் சொந்தச் சொத்துக்களும் உள்ளன.

இதேவேளை மகாராணி எலிஸபெத் பொதுமக்களின் நிர்ப்பந்தத்துக்கு பணியும் வகையில் வருமான வரி செலுத்த கொள்கை அளவில் இணக்கம் தெரிவித்துள்ளார் எனவும் கூறப்படுகிறது.

## யூகோ. தலைவர்களுக்கு சர்வதேச மாநாடு அழைப்பு

பொஸ்னியாவின் தலைநகர் சரயோவோவிற்கு மீண்டும் நிவாரணப் பொருள்களைக் கொண்டு செல்லும் சேவைகளைத் தொடங்குவதற்கு முன்னாள் யூகோஸ்லாவியா குறித்த ஜெனிவா சர்வதேச மாநாடு முன்னாள் யூகோஸ்லாவியாவின் குடியரசுகளின் தலைவர்களை அழைத்துள்ளது.

நிவாரணப்பொருள்களுடன் சென்ற இத்தாலிய விமானம் ஒன்று வீழ்ந்து நொருங்கியதைத் தொடர்ந்தே உதவி விமானச் சேவைகள் யாவும் இடைநிறுத்தப் பட்டன.

## வீதி விபத்தில் 12 பேர் பலி

பிகாரில் நடைபெற்ற வீதி விபத்தொன்றில் 12 பேர் உயிரிழந்ததாயும் 25 பேர் கடுங்காயம் அடைந்ததாயும் தெரிய வருகிறது.

கோவில் பூருக்கும் மிர்சா என்ற இடத்திற்கும் இடையே உள்ள தன்பத் என்ற இடத்தில் டிரக் வண்டியும் வான் ஒன்றும் மோதிக் கொண்டன. இதில் 8பேர் அவ்விடத்திலேயே பலியாகினர்.

---

நட்புறவு உடன்படிக்கையில்

# இந்தியாவும் ரஷ்யாவும் கைச்சாத்திடும் என அறிவிப்பு

(டில்லி)

ரஷ்ய ஜனாதிபதி பொரிஸ் யெல்சின் இந்தியாவுடன் புதிய நட்புறவு உடன்படிக்கை ஒன்றை செய்து கொள்வதற்காக ஜனவரியில் இந்தியப் பயணம் ஒன்றை மேற்கொள்ள இருக்கிறார் என இந்திய மற்றும் ரஷ்ய அதிகாரிகள் டில்லியில் தெரிவித்துள்ளனர்.

ரஷ்ய ஜனாதிபதி யெல்சின் ஜனவரி மாதம் முதல் மூன்றுவார காலத்திற்குள் இந்தியா வந்து சேருவார் எனவும், அவர் முதல் தடவையாக இந்தியப் பிரதமர் நரசிம்மராவைச் சந்திக்க இருக்கிறார் எனவும் இந்திய வெளியுறவு அமைச்சுப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

ஜனாதிபதி யெல்சின் முன்னர் இந்தியாவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையே இருந்த அதே மாதிரியான நட்புறவு மற்றும் கூட்டுறவு உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திடுவார் என ரஷ்யத் தூதரகப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இந்தியாவும் முன்னாள் சோவியத் யூனியனும் 1971 இல் சமாதானம், நட்புறவு மற்றும் ஒத்துழைப்பு உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொண்டன.

## சிந்துவில் தொல்லியல்தடயம் கண்டுபிடிப்பு

சிந்து நதி நாகரிகத்தின் பல முக்கிய தொல்லியல் தடயங்கள் கண்டு பிடிக்கப்பட்டதாக பேராசிரியர் எவ். ஆர். போர்ட்டி தெரிவித்துள்ளார்.

தற்போது கேம்பிறிச் பல்கலைக் கழகத்தின் சேர்ச்சில் கல்லூரியில் இவர் பதவிவகிக்கின்றார்

இவர் உலகப்புகழ்பெற்ற தொல்லியல், வரலாற்று ஆசிரியர் என்பது குறிப்பிடத்தக்கது.

## இந்தியபாதுகாப்புஅமைச்சர் ரஷ்யா பயணமானார்

(மொஸ்கோ)

இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் திரு. சரத்பவார் மொஸ்கோவிற்கு ஒரு வாரகால விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார் எனத் தெரியவருகிறது

பாதுகாப்புத் துறைச் செயலர் என். எம். போரா பாதுகாப்பு உற்பத்திச் செயலர் எஸ். இரகுநாதன் ஆகியோரை உள்ளடக்கிய உயர் மட்டக் குழுவொன்றும் ரஷ்யா செல்கிறது.

இப்பயணத்தின் போது ரஷ்யப் பாதுகாப்பு அமைச்சர் உட்பட மற்றும் பல தலைவர்களுடனும் சரத்பவார் பேச்சுக்கள் நடாத்தவுள்ளார்.

## இந்தியக் கடற்படை சிப்பாய்கள் கைது

(சென்னை)

புதுக்கோட்டை மாவட்டம் பாலக்குடி கிராமத்தைச் சேர்ந்த பெண் ஒருவர் கடந்த மாதம் 16ஆம் திகதி ஜகதாம் பட்டினம் கடற்படைத்தளத்தைச் சேர்ந்தவர்கள் சிலர் சுட்டதில் இறந்துபோனதுதொடர்பாக நீதி விசாரணைக்கு உத்தர விடப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் தொடர்புடைய ஆறு கடற்படை சிப்பாய்கள் விசாரணைக்காக சென்னைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளனர்.

## சீனா குற்றச்சாட்டு

தாய்வானுக்கு 150 எப் 16 ஜெட் விமானங்களை விற்கும் அமெரிக்காவின் முடிவு இரு நாடுகளின் உறவையும் பாரதூரமாகப் பாதித்துள்ளது என்றும் இது சம்பந்தமாக புஷ் பொய் கூறியுள்ளார் என்றும் சீனா குற்றஞ்சாட்டியுள்ளது.

ஈழநாதம்

# புலிகளின் தேசிய பலம் பன்மடங்கு வளர்ந்துள்ளது

**- இளம்பரிதி**

(வடமராட்சி)

விடுதலைப புலிகளினதேசிய பலம் கடந்த பத்து வருட காலத்தில் பன்மடங்கு வளர்ந் திருக்கிறது. இந்த அரசாங் கத்தை ஆட்டம் காணவைக் கும் நிலையில் இன்று வளர்ந் திருக்கிறோம்

இவ்வாறு பருத்தித்துறை பழைய பஸ்நிலைய மைதா னத்தில் நேற்றுமுன்தினம் இரவு நடைபெற்ற மயிலிட்டி மாவீரர்களின் நினைவஞ்சலிக் கூட்டத்தில் யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப் பாளர் திரு. இளம்பரிதி தெரி வித்தார். அவர் மேலும் தெரி விக்கையில்,

சிறிலங்கா இராணுவத்துட னான முன்னைய யுத்தத்தின் போதும் இந்திய இராணுவத் தின் அடாவடித்தனத்தின் போதும் மயிலிட்டி பிரதேசம் ஒரு நெருக்கடியான சூழ்நிலை க்கு உட்படுத்தப்பட்டிருந்தது. இந்திய இராணுவத்தினதும் துரோகக் கும்பல்களினதும் முக்கிய தளமாகவும் இந்த இடம் பயன் படுத்தப்பட்டி ருந்தன. இருந்த போதிலும் இப்பகுதி மக்களின் பங்களிப்பு எமது போராட்ட வளர்ச்சிக்கு தொடர்ந்தும் மெருகூட்டின

அங்கே எற்பட்ட கடந்த கால இராணுவ நடவடிக்கை யின்போது மககளின் அன்றாட கடமைகள் பல பாதிக்கப்பட் டன. பலர் குடும்ப உறவுகளை இழக்க நேரிட்டது. இவர்க ளின் சொத்துக்கள், உயிர்கள் பல அழிக்கப்பட்டன. இந் நிலையில்கூட அப்பகுதி மக்கள் எமது போராட்டத்தில் நம் பிக்கை வைத்து யுவதிகள், இளைஞர்கள் இணைந்து கொண்டனர். எமது போராட் டத்தை வளர்த்த பெருமை மயிலிட்டி பகுதி மக்களுக்கும் உண்டு.

இன்று உங்கள் பகுதிகளில் இருந்து நீங்கள் வெளியேறி னாலும் நீங்கள் அகதிகள் அல்ல. இடம் பெயர்ந்தவர் களே. இந்தப்போராட் டத்தை தாங்க முடியாமல் அந்நிய நாடுகளுக்கு சென்ற வர்கள் தான் அகதிகள். இன்று சில அந்நிய நாடுகளில் எமது மக்கள் நிம்மதியாக சுதந்திர மாக வாழ முடியாதிருப்பதை நீங்கள் அறிவீர்கள்.

தமிழ் மக்களுக்கு வழங்கப் பட்டு வந்த நிவாரண உணவுத் தொகை சரி பாதியாகக் குறைக்கப்பட்டு மீதிப்பணத் தைப் பாதுகாப்புச் செலவுக்கு அரசாங்கம் ஒதுக்கி வருகிறது. எமது உணவைக் கட்டுப் படுத்தி எமது பணத்தை மீதப் படுத்தி அதிலிருந்து குண்டுகள் செய்து தமிழ் மக்களையே அழிக்க அரசு நடவடிக்கை எடுக்கிறது நாடு இருந்தால் தான் வீடு இருக்கும் வீடு இருந்தால் தான் பாசம் பந் தங்கள் இருக்கும் தாயகம் இல்லையேல் வாழ்வில்லை.

விடுதலைப் புலிகளின் போராட்டத்தைச் சிங்கள இராணுவத்தினரால் அழிக்க முடியாது என்ற உண்மையைச் சிங்கள மக்கள் நன்கு உணர்ந் துள்ளனர் சிங்கள மக்கள் அந்த உண்மையை உணரும் வகையில் எமது போராட்டம் வளர்ச்சி கண்டிருக்கிறது. இந்த நிலையில் சிங்கள மக்க ளுக்கு இராணுவத்தில் சலிப் பும் நம்பிக்கையீனமும் ஏற்பட் டுள்ளது

அராலியிலே பத்து இரா ணுவ உயர் அதிகாரிகள் கொல் லப்பட்டனர் மண்டைதீவில் விசைப்படகொன்று கடற்புலி களினால் கைப்பற்றப்பட்டது. எமது போராட்டம் எப்படி வெல்லும் எப்படி வெல்லப் போகிறது என்பதற்கு மேற் குறித்த சம்பவங்கள் ஒரு எடுத் துக் காட்டாக உள்ளன என் றார்.

திரு.கணபதிப்பிள்ளை சுலை மையில் இடம்பெற்ற இக்கூட் டத்தில் தொடர்ந்து தமிழீழ கலைபண்பாட்டு உதவிப் பொறுப்பாளர் திரு தேவர் கடற்புலிகள் யாழ் மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப் பாளர் திரு. மறவன், வடம ராட்சி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. அர சண்ணா வடமராட்சி மகளிர் பிரிவு பொறுப்பாளர் தணி கைச்செல்வி ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

கவிஞர் திரு. யோ. வாஞ்சி நாதன், யாழ் மாவட்ட மாவீ ரர் வரலாற்று பொறுப்பா ளர் திரு இனியவன் ஆகியோ ரும் கலந்துகொண்டனர். திரு. ச. ஏரம்பமூர்த்தி நன்றியுரை வழங்கினார். (82)

# முக்கியத்துவமுடைய சில பகுதிகளை கைப்பற்ற பாகிஸ்தான் முயற்சி

**- சரத்பவார்**

(டில்லி)

இந்தியாவின் கேந்திர முக்கி யத்துவம் வாய்ந்த சில பகுதிக ளைக் கைப்பற்றுவதற்காகப் பாகிஸ்தான் அண்மையில் சில முயற்சிகளை மேற்கொண்டது என இந்திய பாதுகாப்பு அமைச்சர் சரத்பவார் தெரி வித்துள்ளார்.

பாகிஸ்தான் இந்தியாவிற் குள் இயங்கும் தீவிரவாதிக ளுக்கு உதவுவதற்காகவே இப் பகுதிகளைக் கைப்பற்ற முனைந்தது என்று கூறிய அவர், இந்தியாவிலுள்ள தீவிர வாதிகளுக்கு உதவ வேண்டா மென பாகிஸ்தானுக்கு அமெ ரிக்கா கொடுக்கும் நெருக்கடி களை ஏற்பதற்கு பாகிஸ்தான் தயாராகவில்லை என்பத னையே இது எடுத்துக் காட்டு வதாக தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில் இந்தியா நிச்சயமாக ''தீவிரம் குறைந்த'' யுத்தத் தில் இப்பொழுது ஈடுபட்டு வருகிறது.

அண்டைநாடு தீவிரவாதிக ளுக்கு உதவி புரியாமல் சாத கமான முறையில் நடந்து கொண்டால் அமைதியான நிலைமை ஒன்றை ஏற்படுத்த முடியும். இதன் மூலம் இந்தி யாவின் பாதுகாப்பு செலவி னத்தைக் குறைக்க முடியும்.

இந்தியாவுக்கு இன்று ஆயு தம் தேவையாக இருப்பதற் கான ஒரேயொரு காரணம் பாகிஸ்தானே. இதனால் ஆயு தச் செலவினத்தைக் கட்டுப் படுத்துவது நீண்டகால நோக் குடையதாகவே இருக்கும் என்று கூறினார்.

## உண்மை அகதிகளை அமெரிக்கா ஏற்கவேண்டும்

(மணிலா)

இலங்கை உட்பட ஐந்து ஆசிய நாடுகளில் இருந்து உண் மையான அகதிகளை அமெ ரிக்கா ஏற்றுக்கொள்ள வேண் டும் எனக் கத்தோலிக்க அகதி கள் பராமரிப்பு நிறுவனம் அமெரிக்க காங்கிரசைக் கேட் டுள்ளது.

1993ஆம் ஆண்டிற்கு ஒரு இலட்சத்து 25ஆயிரம் அகதி களை ஏற்றுக்கொள்ள அமெ ரிக்க காங்கிரஸ் கொள்கையள வில் ஒப்புக் கொண்டுள்ள போதிலும் இத்தொகை போதாது எனவும் குறைந்தது 25ஆயிரம் பேரையாவது மேல திகமாக ஏற்றுக் கொள்ள வேண்டும் எனவும் இவ் அமைப்பு கேட்டுக் கொண்டுள் ளது.

ஆபிரிக்காவில் அநாதைக ளாக உள்ளவர்களையும் இலங்கை உட்பட ஐந்து ஆசிய நாட்டவர்களையும் அகதிக ளாக ஏற்றுக் கொள்ள வேண் டும் எனவும்,

உண்மை அகதிகளை தெரிவு செய்ய அந்தந்த நாடுகளில் கிளைகளை அமைத்து உதவி செய்யத் தமது அமைப்பு தீர் மானித்துள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆட்டோவில் சென்றவரை மயங்கவைத்து கொள்ளை

தெஹிவளையில் ஆட் டோவை வாடகைக்கு அமர் த்திச் சென்ற ஒருவரை மயங் கவைத்து அவர்வசமிருந்த 82 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகளை அபகரித்துவிட்டு அந்நபரை வெளியே தள்ளி விட்டுச் சென்ற சம்பவம் ஒன்று நடைபெற்றது. பொலி சார் மேற்படி ஆட்டோ ரிச் சோவைத் தேடி வருகின்றார் கள்.

இதேவேளை, கொழும்பு சிறுசங்கராஜ மாவத்தையில் ஆட்டோ ரிச்சோவில் சென்ற நபர்கள் மீது கைக்குண்டு வீசப்பட்டது. குண்டு வண்டிக் குள் விழுந்ததும் வெடிக்க வில்லை பின்னர்இன்னுமொரு குண்டு வீசப்பட்டது அது வெளியே வெடித்தது. இது தொடர்பாகச் சந்தேகத்தின் பேரில் இரு நபர்களைப் பொலிசார்கைதுசெய்துள்ளன

இச் சம்பவங்களைத தொட ர்ந்து கொழும்பில் பிரயாணி கள் ஆட்டோ ரிச்சோவில் பிரயாணம் செய்ய அஞ்சுவ தாகத் தெரிவிக்கப்படுகிறது.

## சுதந்திரக் கட்சியின் பரபரப்பான கூட்டம்

சிறிலங்கா சுதந்திரக்கட்சி யின் மிகக் கொந்தளிப்பான கூட்டம் இன்று நடைபெற வுள்ளதாகத் தெரியவருகிறது.

இதேவேளை, வயதாகி

இடம்பெற்று வருவது குறித்து கட்சியின் சிரேஷ்ட உறுப்பி னர்கள் கவலையடைந்துள்ள தாகவும் தெரியவருகிறது,

கட்சியின் எந்தக் கூட்டத்

## பத்தாயிரம் ரூபா வழங்கப்பட்டது

(கொழும்புத்துறை)

யாழ் மாவட்டத்தில் உள்ள அகதிகள் முகாம் கொட்டில் கள் திருத்தவும், கூரைகள் மேய்வதற்கும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், செஞ் சிலுவைச் சங்க யாழ்ப்பா ணக் கிளைத் தலைமையலுவ லக இடைக்கால நிர்வாகத் திடம் பத்தாயிரம் ரூபா ஒப் படைக்கப்பட்டுள்ளது

மழைக் காலம் தொடங்க உள்ளதால் உடன் அகதி முகாம் கொட்டில்கள் யாவும் புனரமைப்புச் செய்யும்படி இந்நிதி வழங்கப்பட்டது (24)

## கைகலப்பில் 5பேர் மரணம்

(சென்னை)

சென்னையில் கடந்த திங்க ளன்று இரவு மீனவர்களுக்கும் வர்த்தகர்களுக்கும் இடையே ஏற்பட்ட மோதல்களில் குறைந்த பட்சம் ஐந்துபேர் கொல்லப்பட்டனர்.

வர்த்தகர்களில் பெரும்பா லானவர்கள் 1960இல் பர்மா வில் இருந்து இந்தியா திரும் பியவர்கள் ஆகும்.

இருசாராருக்கும் இடையில் சிறிது காலமாக முரண்பாடு இருந்து வந்தது.

சம்பவ தினம் ஓர் சினிமா தியேட்டருக்கு வெளியே இரு பகுதியினரும் மோதிக் கொண் டனர். கலவரத்தில் நான்கு பேர் மரணமானார்கள். பலர் காயமுற்றனர் கலவரத்தை அடக்க பொலிசார் சுட்டதில் ஒருவர் பலியானார்.

## நிவாரண

போகவோ, தொழில் முயற்சி யில் ஈடுபடவோ அனுமதி மறுக்கப்பட்டிருக்கின்றது இந்த நிலையில் வழங்கப்பட்டு வந்த உணவு நிவாரணம் அரைப்பங்கினால் குறைக்கப் பட்டது மனிதாபிமானமற்ற செயல் என அவர்கள் தெரிவித் தார்கள்.

300 குடும்பங்களுக்கு மேல் அகதிகளாக இந்தியாவிலிருந்து வந்த இவர்கள் ஒன்றுக்கு மேற் பட்ட நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கிறார்கள்.

இதே நேரம் இந்தியாவிலி

**சம்பள உயர்வு கோரி**

# பல்கலைக்கழக ஆசிரியர் அடையாள வேலை நிறுத்தம்

(கொழும்பு)

பல்கலைக்கழக ஆசிரியர் களுக்கு புதிய சம்பளத் திட் டம் ஒன்றை அமுல் செய்யும் வரை அறுபது சதவீத இடைக் கால அலவன்ஸ் வழங்கக்கோரி வரும் 29 ஆம் திகதி அடை யாள வேலை நிறுத்தம் ஒன் றில் இறங்க பல்கலைக்கழக ஆசிரியர் சம்மேளனம் தீர் மானித்திருப்பதாக அதன் பொதுச் செயலாளர் கலாநிதி நளின் டி சில்வா தெரிவித்துள் ளார்.

பல்கலைக்கழக ஆசிரியர் களுக்கு 90 சதவீத சம்பள உயர்வு வழங்கப்படவேண்டும் ஊழியர் நம்பிக்கை நிதியம் மீண்டும் வழங்கப்பட வேண் டும் வீடமைப்புத் திட்டங் களின் கீழ் வீட்டு வசதி செய்து தரப்படவேண்டும் அல்லது வீடு களைக் கட்டிக்கொள்ள கடன்

ஒன்பது பல்கலைக்கழகங் களைச் சேர்ந்த சுமார் இரண் டாயிரம் ஆசிரியர்கள் எமது சம்மேளனத்தில் அங்கம் வகிக் கிறார்கள். அடையாள வேலை நிறுத்தம் மூலமாக எமது நோக்கம் நிறைவேறா விட்டால் மாற்று தொழிற் சங்க நடவடிக்கையில் ஈடுபட வேண்டிய நிலை உருவாகும் என்றும் அவர் கூறினார்.

சம்பள உயர்வு கோரி பல மாதங்களாக நாம் பேச்சு வார்த்தைகள் நடத்திவருகின் றோம். எமது கோரிக்கைகள் செவிமடுக்கப்படாமல் இருக் கின்ற அதேவேளை மத்திய வங்கி மற்றும் நிதித்துறை சார் ஊழியர்கள், டாக்டர் கள், தாதிமாருக்கு சம்பள உயர்வுகள் வழங்கப்பட்டுள் ளன

பல்கலைக்கழகங்கள் மூடப் பட்டிருந்த காலத்தில் தடங் கலுக்குள்ளான விரிவுரைகளை நாம் தற்போது நடத்தி வரு கின்றோம். இதனால் எமக்கு வேலைப் பழுவும் அதிகரித் திருக்கிறது எனறும் தெரிவித் தார்.

**அமைச்சுகளும் திணைக்களங்களும்**

# வட-கிழக்கு மாகாணத்தில் ஆங்கிலத்தில் தொடர்புகள்

## 3000 இடம்

மாலை நேரப்பாடசாலை களை நடாத்துவதற்கான ஒழுங்குகள் கல்வித் திணைக் களத்தால் மேற் கொள்ளப் பட்டுள்ளது

இந்நிலையில் இம் மாணவர் கள் தமது கல்வியைத் தடை யின்றித் தொடரபுத்தகங்கள், பாடக்குறிப்புகள், உபகரணங் கள், சீருடைகள் எதுவும் இல் லாத நிலையில் காணப்படு

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மிகக் கொந்தளிப்பான கூட்டம் இன்று நடைபெறவுள்ளதாகத் தெரியவருகிறது.

இதேவேளை, வயதாகி விட்டதால் சிறிது காலம் ஓய்வுபெறும்படி மல்வத்தைப் பீடாதிபதி தெரிவித்த யோசனையை தான் நிராகரித்து விட்டதாக சிறிமா தெரிவித்துள்ளார்.

புதிய சதி நடவடிக்கைகள் இடம்பெற்று வருவது குறித்து கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் கவலையடைந்துள்ளதாகவும் தெரியவருகிறது,

கட்சியின் எந்தக் கூட்டத்திலும் இல்லாதவாறு இன்று நடைபெறவுள்ள கூட்டம் கொந்தளிப்பாக இருக்குமெனவும், இதில் கலந்துகொள்ள கட்சிக்காரரர்கள் வந்து சேர்ந்துள்ளார்கள் எனவும் கூறப்படுகிறது.

அகதிகளாக இந்தியாவிலிருந்து வந்த இவர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கிறார்கள்.

இதே நேரம் இந்தியாவிலிருந்து திருமலை வந்த 37 குடும்பங்களைச் சேர்ந்த 134 பேர் கடந்த வியாழக்கிழமை வவுனியாவை வந்தடைந்தார்கள்.

முல்லைத்தீவு பதின்மூன்று குடும்பங்கள், மன்னார் ஐந்து குடும்பங்கள், கிளிநொச்சி நான்கு குடும்பங்கள், யாழ்ப்பாணம் நான்கு குடும்பங்கள் என இதில் அடங்குகின்றன

## தொடர்ந்தும்

தமது முடிவை மீள் பரிசீலனை செய்ய வேண்டும் எனவும் கேட்டுள்ளதுடன் அரசசார்பற்றநிறுவனங்களின் நிலைப்பாட்டையும் விளக்கியுள்ளது.

இவை சிறிலங்கா ஜனாதிபதிக்கும், புனர்வாழ்வுஅமைச்சு நிதி அமைச்சின்செயலாளர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ச. பா)

## இடம்

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் 500 குடிசைகளை சாவகச்சேரிப்பகுதியிலும் அமைத்து வருகின்றன.

இக்குடிசைகளில் 1870 குடும்பங்கள் விரைவில் குடியமர்த்தப்படவுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச,பா)

## மக்களின்

தொழிலாளர் சங்கம், பேக்கரி உரிமையாளர் சங்கம், சிகை அலங்கரிப்பாளர் சங்கம், ஆபரண உற்பத்தியாளர் சங்கம், விவசாயிகள் சங்கம், ஓய்வூதியர் சங்கம், தீவக நலன் காக்கும் ஒன்றியம், வகுப்புத் தொழிலாளர் சங்கம், கட்டிட தொழிலாளர் சங்கம், கூட்டுத்தாபன ஊழியர் சங்கம், தனியார் கல்வி நிறுவனங்களின் ஒன்றியம், சகல மகளிர் அமைப்புக்களின் சமாசம், சுகாதார சேவை ஊழியர் சங்கம், அரச சார்பற்ற பொது தாபனங்களின் ஒன்றியம், அஞ்சல் ஊழியர் சங்கம், தொலைத்தொடர்புதிணைக்கள ஊழியர்சங்கம், புடைவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்.

ஊழியர் நம்பிக்கை நிதியம் மீண்டும் வழங்கப்பட வேண்டும் வீடமைப்புத் திட்டங்களின் கீழ் வீட்டு வசதி செய்து தரப்படவேண்டும் அல்லது வீடுகளைக் கட்டிக்கொள்ள கடன் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்து உயர்கல்வி அமைச்சருடன் பல தடவைகள் தங்களது சம்மேளனம் நடத்திய பேச்சு வார்த்தைகளினால் பலன் ஏதும் கிட்டவில்லை. அதனால் தான் அறுபது சதவீத இடைக்கால அலவன்ஸ் கோரிக்கையை முன்வைத்து அடையாள வேலை நிறுத்தத்தில் இறங்க உத்தேசித்து இருப்பதாகவும் அவர் கூறினார்

# வட-கிழக்கு மாகாணத்தில் ஆங்கிலத்தில் தொடர்புகள்

வடக்கு-கிழக்கு மாகாண சபையின் கீழ் உள்ள பல அமைச்சுகளும், திணைக்களங்களும் தமிழிலும், சிங்களததிலும் கடிதத் தொடர்பு கொள்ளாமல் ஆங்கிலத்திலேயே கடிதத் தொடர்பு கொள்வதாக அரச கரும மொழிகள் ஆணைக்குழுவுக்கு முறைபபாடுகள் கிடைததுள்ளதாக வடக்கு-கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் எஸ் கணேசநாதன் தெரிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்கு மாகாண அமைச்சுகளும், அவற்றின் கீழ செயறபடும் அனைத்துத் திணைக்களங்களும் தமிழில் அல்லது சிங்களத்தில் பொது மக்களுடன் தொடர்பு கொள்ளுமாறு பணிக்கும்படி வடக்கு-கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலர் அனைத்து அமைச்சுக்களின் செயலர்களையும் கேட்டுள்ளார்.

## 406 முறையீடு

பட்டு இருப்பதாகவும் கூறப்படுகின்றது.

இந்த விசாரணை ஆணைக்குழுவின் கால எல்லை கடந்த மாதத்துடன் முடிவடைவதாக இருந்த போதிலும் இப்போது கால எல்லை அடுத்த வருடம் ஜனவரி 11 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது

இந்நிலையில் இம் மாணவர்கள் தமது கல்வியைத் தடையின்றித் தொடரபுத்தகங்கள், பாடக்குறிப்புகள், உபகரணங்கள், சீருடைகள் எதுவும் இல்லாத நிலையில் காணப்படுகின்றனர் இதனால் க பொ. த சாதாரண பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களின் எதிர்காலம் கேள்விக் குறியாக இருப்பதாக பெற்றோர் கவலை தெரிவிக்கின்றனர் (ச)

## அதிகாரிகள்

இராணுவ நடவடிக்கைக்கென டியர் நிலையில் வைக்கப்பட்டிருந்த ஐந்து படையணிகளைச் சேர்ந்த 4500 படையினரை கிழக்கிற்கு மாற்ற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளமையாலும் இந் நடவடிக்கை மந்த நிலையை அடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சிறிலங்கா அரசாங்கம் அரசியல் தீர்விற்கான சகல வழிகளையும் மூடியுள்ள இவ்வேளையில் இராணுவ நடவடிக்கையும் மந்த நிலையினை அடைந்துள்ளது என் பி.பி.ஸி மேலும் குறிப்பிட்டது.

# தியாகி திலீபன் நினைவு தட கள விழா-1992

நேற்றுடன் முடிவடைந்த இத் தட கள விழாவின் இறுதி பதக்கப் பட்டியல் வருமாறு.

| வட்டப் பிரிவு | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
|---|---|---|---|
| சண்டிலிப்பாய் | 09 | 08 | 05 |
| யாழ்ப்பாணம் | 06 | 01 | 03 |
| தெல்லிப்பழை | 04 | 07 | 05 |
| நல்லூர் | 04 | 06 | 08 |
| தீவகம் | 04 | — | 03 |
| பருத்தித்துறை | 03 | 05 | 03 |
| உடுவில் | 01 | 02 | — |
| சங்கானை | 01 | 01 | — |
| கரவெட்டி | — | 02 | 02 |

கோப்பாய், பளை தலா ஒரு வெண்கலம்

புள்ளி அடிப்படையில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற வட்டப் பிரிவுகள்:

| | | |
|---|---|---|
| 1 ஆம் இடம் சண்டிலிப்பாய் | 74 | புள்ளிகள் |
| 2 ஆம் இடம் தெல்லிப்பழை | 55 | புள்ளிகள் |
| 3 ஆம் இடம் நல்லூர் | 47 | புள்ளிகள் |
| ஆண்கள் பிரிவு | | |
| 1 ஆம் இடம் பருத்தித்துறை | 29 | புள்ளிகள் |
| 2 ஆம் இடம் தீவகம் | 23 | புள்ளிகள் |
| 3 ஆம் இடம் யாழ்ப்பாணம் | 22 | புள்ளிகள் |
| பெண்கள் பிரிவு | | |
| 1 ஆம் இடம் சண்டிலிப்பாய் | 60 | புள்ளிகள் |
| 2 ஆம் இடம் தெல்லிப்பழை | 43 | புள்ளிகள் |
| 3 ஆம் இடம் நல்லூர் | 30 | புள்ளிகள் |

# மக்கள் வலிமைபெற விளையாட்டு அவசியமானது

– துணைவேந்தர்

(நமது நிருபர்)

ஒரு இனத்தை அழிக்க வேண்டுமாயின் அந்த இனத்தின் கல்வியையும் உடல் வலிமைபேணும் விளையாட்டையும் அழித்தால் போதுமானது. இதனையே சிறிலங்காவின் பெரும்பான்மை இன அரசு செய்ய முனைகிறது

இவ்வாறு நேற்று யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற தியாகி திலீபன் நினைவு இரண்டாவது தடகள விளையாட்டுப் போட்டி இறுதிநாள் நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகையில் யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் திரு அ. துரைராசா தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட தளபதி திரு செல்வராஜா மற்றுமொரு சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட இந் நிகழ்ச்சியில் துணைவேந்தர் தொடர்ந்து உரையாற்றுகையில் அரசு மேற்கொண்டுள்ள போர் நடவடிக்கைகளால் எமது கல்வியும் விளையாட்டும் பாதிப்படைந்து வருகின்றது இந்த வேளையில் தியாகி திலீபன் நினைவு தடகள விளையாட்டு மிகவும் பயனுடையதாகும்.

"மக்கள் புரட்சி வெடிக்கட்டும் சுதந்திர தமிழீழம் மலரட்டும்" என்ற திலீபனின் கனவு நனவாக மக்கள் வலிமை கொண்டு எழ இந்த விளையாட்டுகள் அவசியமானது என்றார்.

யாழ் மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி தலைமையில் இடம்பெற்ற இந்தவிழாவில் பரிசளிப்பும் இடம்பெற்றது விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பின் அணி வகுப்பும் அங்கு இடம் பெற்றது.

## ஆஸ்பத்திரி

பிரிவுகளைச் சேர்ந்தவை. மிகவும் பழையனவான இவற்றைச் சரிவர உபயோகிக்க முடியாது இருப்பதினால் சுகாதார சேவைகளை மேற்கொள்வது சிரமமாகி உள்ளது என அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது

## படகு மீது

கடலில்பாய்ந்த குருநகரைச் சேர்ந்த மரியன்னத்தம்பி (வயது 27) திரும்பிவரவில்லை என்றும் வள்ளத்துடன் மற்றும் இருவர் கரை வந்தடைந்ததாகவும் அறிவிக்கப்படுகிறது. (21

# உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

## 06-09-92

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம் 5542

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கம்:

28 6020, 26-6075, 41-2659, 27-2014, 24-2009, 40-2829, 28-2657, 24 5437, 26-375, 24-5119, 43-1019, 26-6984, 28-2547, 26-3632, 41-9327, 22-6746, 2[illegible]-4672, 28-2511, 41 8617, 28-1992

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கம்:

40-1214 24-4560, 26-3177, 26-5?81, 26-355, 26-4990, 41-8482, 26-7234, 41-9530, 26-5576, 22-4862, 40-1079, 26-4882, 26-2070, 24-853, 41-9746, 24-4745, 28-8037, 28-4255, 26-8382, 42-2355, 42-3267, 27-6704, 41-7563, 24-4323

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 7 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.